வேஷம் ஒருநாள் கலையாதோ!

S. செல்வின் சிரோமணி

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

என் நாமம்
தரிக்கப்பட்ட
என் ஜனங்கள் தங்களைத்
தாழ்த்தி, ஜெபம்பண்ணி,
என் முகத்தைத்
தேடி, தங்கள் பொல்லாத
வழிகளை விட்டுத்
திரும்பினால்,
அப்பொழுது
பரலோகத்திலிருக்கிற
நான் கேட்டு, அவர்கள்
பாவத்தை
மன்னித்து, அவர்கள்
தேசத்துக்கு
சேமத்தை கொடுப்பேன்

II நாளா 7:14

வாழ்த்துரை

இப் புத்தகத்திற்கு வாழ்த்துரை எழுதித் தரும்படி திரு. செல்வின் சிரோன்மணி அவர்கள் என்னிடம் கேட்ட போது நான் மகிழ்ச்சியுடன் இப்புத்தகத்தை வாங்கி என் மேஜை மீது வைத்துவிட்டு ஞாயிறு ஆராதனை சென்று பின் என் அலுவலகம் வந்தேன். ஆனால் முன்பு ஒருநாளும் நூற்களுக்கு முன்னுரை எழுதிப் பழக்கமின்மையால் காலங் கடத்தி வந்தேன். மேஜையின் மீதிருந்த புத்தகம் திரும்பத் திரும்ப என் கண்களில் படவே நான் அதை எடுத்துப் படிக்கலானேன். வாசிக்க ஆரம்பித்தவன் முழுவதையும் வாசித்து முடித்துவிட்டு கீழே வைக்கும் அளவுக்கு புத்தகம் விறுவிறுப்பாக இருந்தது. நீங்களும் இப்புத்தகத்தைக் கையில் எடுத்ததும் படித்து முடித்துவிட்டு தான் கீழே வைப்பீர்களென்பதற்கு நானே சாட்சி உணர்ச்சியைத் தூண்டும் சம்பவங்களும், உள்ளத்தைப் பக்குவப்படுத்தும் உயரிய கருத்துக்களும் என்னை அதிகம் கவர்ந்தன. எளிமையான நடை, எழுத்தின் ஓட்டம், கட கடவென என்னைப் படிக்கத் தூண்டியது. அவர் பிரசங்கத்தைப் போலவே இப்புத்தகமும் வாசிக்கும் போது சிந்தனையைத் தூண்டுகிறது, ஆண்டவரிடம் வழிநடத்திச் செல்கிறது. எனவே கிறிஸ்தவ இலக்கிய உலகில் உள்ள எண்ணற்ற வழிகாட்டும் நூற்களுக்குள் இது இயேசு இரட்சகரின் நாமத்திற்கு மகிமையான ஒரு வழிகாட்டும் மைல்கல் ஆகும், அவரது இப்பணி சிறக்க இறைவன் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

பாளையங்கோட்டை
627002

R. ஆர்தர்மணி சொர்ணபாண்டி
மானேஜர், டயோசீசன் பிரஸ்.

முகவுரை

நான் பாளை தூய சவேரியார் கல்லூரியில் இறுதி ஆண்டு B.A படித்துக் கொண்டிருக்கும் போது 1967 -ம் ஆண்டு அக்டோபர் மாதம் பண்ணைவிளையில் நடைபெற்ற முதல் கிதியோனியர் முகாமில் இயேசு இரட்சகரை என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டேன். அவர் பணிக்கென்று என் வாழ்க்கை முழுவதையும் அர்பணித்தேன்.

சிறுவர், வாலிபர், சபைமக்கள் மத்தியில் தேவன் அவர் நாம மகிமைக்காக பயன்படுத்தலானார். தேவ செய்தியின் இறுதியில் உள்ளத்தை உணர்ச்சி வசப்படுத்தி, இறைவன் பால் இழுத்துச் செல்லும் சில சம்பவங்களையும் கதைகளையும் கூறி முடிப்பது எனது வழக்கம். இச்சம்பவங்களும் கதைகளும் அநேகரை தேவனிடம் ஒப்புக்கொடுக்க ஏதுவாக இருந்ததாகவும் ஏன் அவைகளை நீங்கள் கதைவடிவில் வெளியிடக்கூடாது என்றும் சிலர் வினவினர். நானும் பல நாட்களாக சிந்திக்கலானேன் ஜெபித்து வந்தேன். எனவே இப்புத்தகத்தை தேவ நாம மகிமைக்காக வெளியிட்டேன். மீண்டும் 30 ஆண்டுகளுக்குப்பின் பல தேவபிள்ளைகளின் வேண்டுகோளுக்கு இணங்க இப்புத்தகத்தை தேவநாத மகிமைக்கென்று வெளியிட தீர்மானித்தேன். இப்போது இதை வெளியிட பெரிதும் உதவி செய்த, நைஜீரியாவில் பணிபுரியும் அன்புத்தம்பி Er. தேவகுமார் எட்வின் M.Tech., அவருடைய துணைவியார் திருமதி. ஹெலன் தேவகுமார் M.Sc. அவர்களுக்கும், குடும்பத்தினருக்கும் எங்கள் இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றி கூறுகிறேன். தேவன் அவர்களுக்கு நல்ல சுகம், பெலன் நீடிய ஆயுளைக் கொடுக்கவும் மகன், மகள்களின் படிப்பு எதிர்காலத்தை ஆசீர்வதிக்கும்படி ஜெபித்துக் கொள்ளுங்கள். இக்கதைகளைப் படிக்கும் நாம் ஒவ்வொருவரும் என்னை எனக்குக் காண்பியும் உம்மையும் எனக்குக் காட்டும் என்ற ஜெபசிந்தையோடு படிக்கும் போது தேவன் மெய்யாகவே நம் உள்ளங்களில் பேசுவார். நம்மில் ஓர் மாற்றம் காண்போம். தூய ஆவியானவர் தாமே நம்மில் கிரியை செய்வாராக.



S. செல்வின் சிரோமணி
செந்தூர்கனி செல்வின்

பொருளடக்கம்

1. மானிடனே தேவசித்தம் அறியாயோ?
2. விலைபேறப்பெற்ற இரட்சிப்பு
3. வேஷம் ஒரு நாள் கலையாதோ?
4. நாளை உன்னுடையதல்லவே!
5. நியாயத்தீர்ப்பில் நீ தப்பமாட்டாய்
6. காலம் தாழ்த்தினால் மரணமே!
7. இதல்லவோ ஆத்தும பாரம்!

மானிடனே தேவசித்தம் அறியாயோ!

பாலஸ்தீன தேசத்திலுள்ள அடர்ந்தக் காட்டுப் பிரதேசத்தில் மூன்று மரங்கள் தடித்து. ஓங்கி வளர்ந்து கம்பீரமாக நின்று கொண்டிருந்தன. ஒரு நாள் இம்மரங்கள் ஒவ்வொன்றும் தங்களைக் குறித்துப் பெருமையாகப் பேசிக் கொள்ளத் துவங்கின. தடித்து குட்டையாக வளர்ந்த "ஓக்" என்ற மரம் கூறியது. 'என்னைப் பார்த்தாயா? நான் எவ்வளவு தடித்தும், உறுதியாகவும் அழகாகவும் இருக்கிறேன். இன்னும் சில நாட்களில் என்னைக் கொண்டு போய் ஒரு அழகிய சிம்மாசனமாகச் செய்து அரசன் அரண்மனையில் வைப்பார்கள். அரசன் அழகிய உடைகளுடன் என் மீது அமருவான். சாமரம் வீசுவார்கள்; என்னைச் சுற்றிலும் வாசனை புகையிடுவார்கள். வருவோரெல்லாம் என் முன் விழுந்து வணங்குவார்கள். நான் இத்துணைச்சிறப்புடன் வாழ்வேன்' என்றது.

இதனைக் கேட்ட ஓங்கி வளர்ந்த உறுதியாகக் காணப்பட்ட பைன் மரம் கூறியது. ஏதோ பெருமையடித்துக் கொள்ளுகிறாயே, என்னைப் பார், நான் எவ்வளவு வளர்ந்திருக்கிறேன். எவ்வளவு உறுதியாக இருக்கிறேன். தண்ணீரோ, கரையானோ என்னை ஒன்றும் செய்து விட முடியாது. இன்னும் சிறிது நாட்களில் என்னைக் கொண்டு போய் அழகிய கப்பலாகச் செய்து கடலில் மிதக்க விடுவார்கள். அரசர்களும், பிரபுக்களும், செல்வந்தர்களும், என் மீது அமர்ந்து பிரயாணம் செய்வார்கள். நான் உலகத்தையெல்லாம் சுற்றி வலம் வருவேன். எனக்கு நிகர் யார்? என்று பெருமையடித்துக் கொண்டது.

இதைக் கேட்ட மூன்றாவது 'பர்' என்ற மரம் கூறியது. போதும் போதும் அதிகமாக எண்ணிக் கொள்ளாதே என்னைப் பார்த்தாயா? - நான் அதிக வளர்த்தியுமல்ல, அதிக குட்டையுமல்ல, நடுத்தரமாக இருக்கிறேன். என் அழகையும், நிறத்தையும், உறுதியையும் பார். நீங்கள் இருவரும் சுயநலமுடையவர்கள். உங்களுக்காவே வாழப் போகிறீர்கள். நானோ பிறருக்காக வாழப் போகிறேன். அதுவும் இந்த உலகத்தில் பாதை தெரியாமல் தடுமாறிப் போகும் மக்களுக்கு பாதை காட்டும் கருவியாகப்

பயன்படப் போகிறேன். இன்னும் சில நாட்களில் என்னைக் கொண்டு போய் இரண்டாகப் பிளந்து, செதுக்கி, அழகுபடுத்தி நான்கு ரோடுகள் சந்திக்கும் இடத்தில் பாதை காட்டும் ஒரு கை காட்டி மரமாக வைப்பார்கள். எந்த ஊருக்கு எந்த பாதையாக போக வேண்டும் என்று திசை தெரியாமல், தடுமாறி, அங்கலாய்த்து, தவித்து நிற்கும் மக்களுக்கு நான் பாதை காட்டுவேன்" என்று தன்னைக் குறித்து உயர்வாகக் கூறிக் கொண்டது.

சிறிது காலம் சென்றது சோதனையின் நாளும் வந்தது. தடித்து உறுதியாகக் காணப்பட்ட ஓக் மரத்தை வெட்டிக் கொண்டு வந்து, மாட்டுத் தொழுவத்தின் அருகில் போட்டார்கள் மேய்ப்பர்கள் மாடுகளை மேய்த்து விட்டு வந்து அந்த மரத்தில் தங்கள் மாடுகளைக் கட்டினார்கள், மாடுகள் தின்பதற்காக வைக்கோலை அதன்மீது போட்டார்கள் மாட்டுச் சாணமும், கழிவு நீரும் அதன் மீது பட்டது. ஒரே நாற்றம் ஓக் மரம் தனக்குள்ளே நொந்து கொள்ளத் துவங்கியது. நான் ஒரு அரசன் வீற்றிருக்கும் சிம்மாசனமாவேன், அரசன் என்மீது அமருவான், சாமரம் வீசுவார்கள், வாசனை புகையினால் மணம் கமழ்வேன் என்றெல்லாம் எண்ணி எண்ணி ஆசைப்பட்டேன் ஆனால் என்னைக் கொண்டு வந்து இப்படி மாட்டுத் தொழுவத்தில் போட்டு, நாறும்படி செய்து விட்டார்களே. கடவுள் இதற்காகவா எனனைப் படைத்தார் என்று புலம்பியது.

சில நாட்கள் சென்றபின் இன்னும் சிலர் வந்து ஓங்கி வளர்ந்து உறுதியாகக் காணப்பட்ட பைன் மரத்தை வெட்டிக்கொண்டு போய் கடற்கரை ஓரத்தில் போட்டு விட்டார்கள். வெயில் ஒரு பக்கம் மழை ஒரு பக்கம் கடற்கரை ஒரங்களில் அசுத்தம் செய்ய வருவோரின் செயலால் நாற்றம் ஒரு புறம். இவைகளைச் சகிக்க முடியாத பைன் மரம் தனக்குள்ளே நொந்து கொள்ளத் தொடங்கியது. "நான் ஒரு பெரிய கப்பலாக மாறுவேன். அரசர்களும் பிரபுக்களும், செல்வந்தர்களும் என் மீது அமர்ந்து பிரயாணம் செய்வார்கள். உலகமெல்லாம் சுற்றி வலம் வருவேன் என்று எண்ணினேன். ஆனால் ஆண்டவன் என்னை இந்த நிலைக்கு ஆளாக்கிவிட்டாரே" என்று வேதனைப்பட்டது.

இன்னும் சில நாட்கள் சென்றபின் நடுத்தரமான அழகும் உறுதியும் கொண்ட 'பர்' என்ற மரத்தையும் வெட்டி போர் சேவகர்கள் கூடாரம் அமைத்துத் தங்கி இருக்கும் பாளையத்தில் கொண்டு போய்ப் போட்டு விட்டார்கள், குளிர் காய நெருப்பு பற்றவைக்க போர் வீரர்கள் அதன் பட்டைகளை உரித்தெடுத்தனர். அதை வெட்டி, இரண்டு கல்லை வைத்து சிலர் தீ மூட்டினர். இன்னும் சிலர் அதன் மேல் ஈட்டியைக்குத்தி அதில் குதிரைகளைக் கட்டினர். குதிரையின் சாணம் ஒருபக்கம் அதன்மீது பட்டு நாற்றம் எடுக்க ஆரம்பித்தது. இம்மரத்திற்கு மிகுந்த வேதனையும்

கலக்கமும் ஏற்பட்டது. "என்னை ஆண்டவரே, நான் எனக்கென்றும் வாழாமல் பிறருக்காக வாழ ஆசைப்பட்டேன். பாதை தெரியாமல் தடுமாறும் மக்களுக்கு பாதை காட்ட விரும்பினேன், ஆனால் என்னை இந்த இழிவான நிலைக்குள்ளாக்கிவிட்டீரே" என்று நொந்து கொண்டது.

சில நாட்களுக்குப் பின் மாட்டுத் தொழுவத்தில் நாறிக் கிடந்த "ஓக்" மரத்தை எடுத்து, அதை வெட்டி, குடைந்து, செதுக்கி அழகிய தொட்டிலாகச் செய்து வைக்கோலையும் புல்லையும் போட்டு அதன்மீது கந்தைத் துணியில் பொதிந்த பாலகனாகிய இயேசுக் கிறிஸ்துவைக் கிடத்தினார்கள். ஓக் மரம் பட்ட ஆனந்தத்திற்கு அளவே ஆசையையும் எண்ணி வேதனைப்பட்டது. "நான் உலகத்தில் இம் மண்ணுலகை ஆளும் அரசனை சுமக்க வேண்டும், மணம் வீச வேண்டும் என்று அற்பத்தனமாக எண்ணி விட்டேன் என்று அற்பத்தனமாக எண்ணி விட்டேன். ஆனால் ஆண்டவன், இம் மண்ணுலகையும், விண்ணுலகையும் ஆளும் இறைவனையே சுமக்கச் செய்து விட்டாரே. எத்தனை பெரிய நோக்கத்தோடு என்னை ஆண்டவன் படைத்திருக்க நான் இப்படி அற்பத்தனமாக நினைத்து விட்டேன்" என்று வருந்தியது.

முப்பது ஆண்டுகட்குப் பின் கடற்கரை ஓரத்தில் நாறிக்கிடந்த, வெயிலில் காய்ந்து கிடந்த ஓங்கி வளர்ந்த உறுதியான பைன் மரத்தை எடுத்து அதைக் குடைந்து செதுக்கி அழகிய படகாக மாற்றிக் கடலில் மிதக்க விட்டிருந்தனர். மக்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வந்த இயேசு கிறிஸ்து அந்த படகின்மீது அமர்ந்து தன்னைத் தேடி வந்த மக்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். இதைக் கண்ட பைன் மரம் கூறியது. "நான் என்னைக் குறித்து எவ்வளவு அற்பத்தனமாக எண்ணி விட்டேன். அரசர்களையும், பிரபுக்களையும் செல்வச் சீமான்களையும் சுமந்து கொண்டு இவ்வுலகத்தையே சுற்றி வலம் வர வேண்டும் என்று எண்ணினேன். ஆனால் இன்று இவ்வுலகத்தையே படைத்து ஆளும் இறைவன் இயேசு இரட்சகரே என்மீது அமர்ந்து போதனை செய்கிறாரே. அவரை சுமப்பது எத்தனை பெரிய பாக்கியம். என்மீது தேவன் இத்தனை பெரிய திட்டம் வைத்திருக்க நான் எவ்வளவு அற்பத்தனமாக நினைத்து விட்டேன்" என்று எண்ணி வருந்தியது.

இன்னும் மூன்றரை ஆண்டுகள் சென்றபின் போர்ச்சேவகர்களின் கூடாரத்தருகில், நாறிப்போய், குத்தப்பட்டு, பட்டை உரிக்கப்பட்டுக்கிடந்த அந்த நடுத்தரமான அழகிய உறுதியான மரத்தைப் போர்ச் சேவகர்கள் எடுத்து அதை இரண்டாகக்கீறி, ஒரு சிலுவையாகச் செய்து அதை இயேசுவைச் சுமக்கச் செய்து, கொல்கதா மலையில் இயேசு இரட்சகரை அந்த சிலுவை மீது வைத்து ஆணிகளால் சிலுவையில், அறைந்தார்கள். இயேசு ரட்சகர் மனுக்குலத்தின் பாவத்திற்காக வானத்திற்கும் பூமிக்கும் இடையே அந்த சிலுவையில் தொங்கி மரித்தார்

அப்போது தான் அந்த 'பர்' மரம் தன் எண்ணத்தையும் அறியாமையும் எண்ணி வருந்தியது. ''நான் இந்த உலகத்தில் வழிதப்பிப் போகிற மக்களுக்கு வழி காட்ட வேண்டும் என்று அற்பத்தனமாக எண்ணினேன். ஆனால் என் தேவனோ பரலோகத்துக்கு வழி காட்டும் ஒரு சிலுவையாக என்னை ஏற்படுத்த சித்தமுள்ளவராக படைத்திருக்கிறாரே'' என்று எண்ணி தன் அறியாமைக்காக வருந்தியது.

இதை வாசிக்கும் என் அருமை சகோதரனே, சகோதரியே, இன்று நம் வாழ்க்கையில் தேவன் வைத்திருக்கிற தேவ சித்தத்தை, தேவ திட்டத்தை உணராமல் நாம் ஒரு திட்டத்தை வைத்துக்கொண்டு அது நிறைவேறவில்லையே என்று எண்ணி நம்மையும், நம்மை உருவாக்கிய தெய்வத்தையும் நொந்து கொள்ளுகிறோம். நாம் விரும்புவதற்கும், நினைப்பதற்கும் மேலான திட்டங்களே தேவன் நம்மில் நிறைவேற்ற விரும்புகிறார், வல்லவராகவும் இருக்கிறார். நாம் வேலைசெய்யும் அலுவலகத்தில் புறக்கணிக்கப்படலாம், மதிப்பற்ற வேலையாக இருக்கலாம். நான் எப்படிப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவன். எவ்வளவு படித்தவன், ஒரு சிறந்த திறமைசாலி நான் இப்படியா கஷ்டப்பட வேண்டும். என்னை ஏன் ஆண்டவர் இப்படிச் செய்துவிட்டார் என்று ஆண்டவனை நொந்து கொள்ளாதே, கவலைப்படாதே. ஏற்றவேளை வரும்வரை அவருடைய பலத்த சத்துவத்துக்குள் அடங்கி இரு. தேவன் உன்னை உயர்த்துவார், ஆசீர்வதிப்பார், அநேகருக்கு ஆசீர்வாதமாக இருப்பாய். தேவ சித்தத்திற்கு உன்னை முற்றிலும் ஒப்புக் கொடுத்து பொறுமையாய் அவர் சித்தம் நிறைவேறக் காத்திரு.

WE ARE SAVED TO SERVE!

My hands, Lord, i give to thy service,
Each talent I lay at thy feet;
For effort and prayer is sore needed
And workers in every street.

விலையேறப் பெற்ற இரட்சிப்பு!

உலகத்திலே பெரிய தீவுக்கண்டம் ஆஸ்திரேலியா நாடு தான். இதன் கிழக்கு பகுதியில் கடலுக்குள் கிரேட் பேரியர்ரீப் என்ற பவழப்பாறைகள் அடுக்கடுக்காகக் காணப்படுகின்றன. இவைகளுக்கு இடையே மீனவர்கள் பலவகையான மீன்களை பிடித்துத் திரண்ட செல்வம் சம்பாதித்து வந்தனர். முத்துக்களும் இங்கே அதிகம் காணப்படுவதால் முத்துக் குளித்தலும் இங்கு நடைபெற்று வந்தது.

கடற்கரை ஓரங்களில் மீனவர்களே பெரும்பாலும் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் மத்தியில் லாரன்ஸ் என்ற போதகர் சென்று சுவிசேஷம் கூறிவந்தார். அந்த மீனவர்கள் தங்கள் தொழிலில் தான் கவனம் செலுத்தினரே தவிர, சுவிசேஷத்தின் மீது கவனம் செலுத்தவில்லை. பல ஆண்டுகள் உருண்டன. போதகருக்கும் வயது ஆகிவிட்டது என்றாலும் அவர் சற்றும் மனம் தளராமல் அம் மீனவர்களுக்கு தொடர்ந்து சுவிசேஷம் அறிவித்து வந்தார்.

ஒரு நாள் லாரன்ஸ் குருவானவர் வழக்கம் போலமீனவர்களுக்கு சுவிசேஷம் கூறச் சென்றார். மீனவர்களும் வேண்டா வெறுப்புடன் கேட்டனர். 22 ஆண்டுகள் தொடர்ந்து இரட்சிப்பின் செய்தியைக் கேட்டனர். ஆயினும் ஒருவராவது செவிசாய்க்கவில்லை. அன்று மீனவர்களின் தலைவனானவயது முதிர்ந்த ரொட்ரிகோ என்பவன் போதகரைத் தன் வீட்டிற்கு அன்புடன் அழைத்துச் சென்றான் போதகரும் மிகமகிழ்ச்சியுடன் சுவிசேஷம் கூறலாம் என்று சென்றார் அம்மீனவர்களில் அப்போதகர் அருந்துவதற்கென டீயைக் கொண்டு வந்தான். அப்போதகர் டீயைப் பருகியவாறே இரட்சிப்பைப்பற்றி கூறலானார். கிறிஸ்து நமக்காகச் சம்பாதித்த இரட்சிப்பு விலையேறப் பெற்றது அதை அவர் நமக்கு இலவசமாக ஈகிறார் நாம் விசுவாசித்தால் அதைப் பெற்றுக் கொள்ளலாம் என்று பேசிக்கொண்டே சென்றார்; ஆனால் ரொட்ரிகோவால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை, ஐயா நீங்களும் 22 வருடங்களாக இரட்சிப்பு, இரட்சிப்பு என்று பேசிக்கொண்டே போகிறீர்கள் நாங்களும் கேட்டுக்கொண்டே இருக்கிறோம் எனக்கும் வயதாகிவிட்டது. வீடு போ,

போ என்கிறது கல்லறை வா, வா என்று அழைக்கிறது. போகவேண்டிய நாளும் நெருங்கி விட்டது இப்போவா, அப்போவா என்னும் நிலைமையில் உள்ளேன்.

ஐயா, நான் இப்போது ஏன் உங்களை அழைத்து வந்தேன் என்று சொல்லுகிறேன் கேளுங்கள் நீங்கள் பல ஆண்டுகளாக என்னிடம் அன்பு வைத்து இயேசு ரட்சகரின் புண்ணிய உபதேசங்களை எனக்குக் கூறி வருகிறீர்கள். என்னிடம் பாசத்துடன் பழகி என்னை மிகவும் நேசிக்கிறீர்கள். ஆகையால் உங்களுக்கு நான் ஒரு பரிசை அளிக்க விரும்புகிறேன் என்று கூறிக்கொண்டே அறை வீட்டு கதவைத் திறந்து உள்ளேப் பிரவேசித்தார். பாதிரியார் ஒன்றும் புரியாதவராய் திகைத்தார். பெட்டியைத் திறக்கும் ஒரு சப்தம் அதை அடுத்து ஒரு கந்தைத்துணிப் பொட்டலத்தை எடுத்துக் கொண்டு உள்ளே வந்தார். பொட்டலத்தை அவிழ்த்தார். பாதிரியாருக்கு ஒன்றுமே புரியவில்லை. இதை கொட்டாமல் பார்த்துக்கொண்டேயிருந்தார். துணிகளை எல்லாம் அவிழ்த்தப்பின் ஒளிவீசும் அழகான ஒரு முத்தை எடுத்தார்.

“போதகர் ஐயா, என் இத்தனை ஆண்டு வாழ்க்கையின் மதிப்பு அனைத்தும் இம்முகத்தில் அடங்கியுள்ளது. இதை இதுவரை யாருக்கும் காட்டாமல் யாருக்கும் கொடுக்காமல் பத்திரமாக என் உயிரைவிட மேலாகப் பாதுகாத்து வந்தேன். இப்போது என் காலம் முடிவடையப் போகிறது. ஆகையால் என்னை இதுவரை நேசித்து வந்த உங்களுக்கு இதைக் கொடுக்க விரும்புகிறேன். இதைப் பெற்றுக் கொள்ளுங்கள்”. என்று கையை நீட்டின போதகரிடம் கொடுத்தான். போதகருடைய உடம்பெல்லாம் சிலிர்த்தது. இதைப்போன்ற ஒரு முத்தைப் போதகர் இதுவரை பார்த்ததில்லை. இத்தனை விலை மதிப்புள்ள முத்து இலவசமாகக் கிடைப்பதாக அவர் கூறுவதைப் போதகரால் நம்பவும் முடியவில்லை. ஒரு கணம் அப்படியே திகைத்து நின்றார். மீண்டும் மீண்டும் அவரிடம் இதைவாங்கிக் கொள்ளுங்கள் என்றார். போதகர் அவரைப்பார்த்து ஐயா இதன் விலை மதிப்பிட முடியாது, நான் இதை எப்படி வாங்க முடியும். தயவு செய்து வேறு யாருக்காவது கொடுங்கள். எனக்கு வேண்டாம் என்றார். ஆயினும் வயோதிக மீனவர் ஐயா நான் விலை கூறவில்லை; உங்களுக்கு இலவசமாகத் தருகிறேன்; பெற்றுக்கொள்ளுங்கள் என்றார். போதகர் நடுக்கத்துடனும், திகிலுடனும் ‘ஐயா என்னிடத்திலுள்ள சிலப் பொருட்களை விற்று, அத்துடன் என் கையிலுள்ள பணத்தையும் சேர்த்துக் குறைத்து ரூ 10,000 கொடுத்து வாங்கிக் கொள்கிறேன்’ என்றார்.

அப்போது ரொட்ரிக்கோ போதகரைப் பார்த்துக் கூறினார். “போதகர் ஐயா, நீங்கள் பல இலட்சம் ரூபாய் கொடுத்தாலும் இம்முத்துக்கு இணையாகாது. அது அத்தனை விலையேறப் பெற்றமுத்து. இதற்கு

விலையே கிடையாது ஐயா என்றார். போதகரால் ஒன்றும் பேசமுடியவில்லை. மீண்டும் மீனவர் தம் வாய் திறந்து, அந்த முத்தின் வரலாற்றை, விலையேறப்பட்ட தன்மையினை கூறத்துவங்கினார்.

ஐயா, 20 ஆண்டுகட்டு முன்பு நானும் என் ஒரே செல்வ மைந்தன் ரொசாரியாவும் முத்து எடுப்பதற்காக ஆழ்கடல் நோக்கிச்சென்றோம். எங்களுடன் மற்றும் பல மீனவ நண்பர்களும் முத்து குளிக்க வந்திருந்தனர். என் மகன் மிக திடகார்த்தமான வாலிபன். முத்து எடுப்பதிலும் வல்லவன். பல நிமிடங்கள் மூச்சை அடக்கிக் கொண்டு கடலின் ஆழத்தில் முத்தெடுக்கும் ஆற்றல் பெற்றவன். அன்று வழக்கம் போல் முத்தெடுக்கத் தண்ணீருக்குள் மூழ்கினான்.

முத்தெடுப்பவர்கள் உடலுடன் ஒரு கயிறு கட்டப்பட்டிருக்கும். முத்து எடுக்கிறவர்கள் முதலாவது கயிறை ஒரு வகையாக அசைத்தால் மேலே வர ஆயத்தம் என்று அர்த்தமாம். இரண்டாவது ஒரு வகையாகக் கயிரை ஆட்டினால் தூக்கலாம் என்று பொருள்படுமாம். மூன்றாவது ஒரு வகையாக அசைத்தால் அவசரம் ஆபத்து, உடனே கயிரை மேலே இருங்கள் என்று அர்த்தமாம்.

அதன்படி என் மகன் கடலுக்கு அடியிலுள்ள முத்துக்களைச் சேகரித்துக் கொண்டிருந்தான். முதலாவது கயிரை அசைத்தான். நாங்கள் கயிரை இழுக்க ஆயத்தமானோம். மீண்டும் அவன் கயிரை அசைத்தான். நாங்கள் இழுக்க எத்தனித்தோம், அதற்குள் அவன் கண்களில் வெகு நேர்த்தியான முத்து தென்பட்டிருக்கிறது. அடுத்த முறை எடுக்க வருவதற்குள் வேறு யாரும் எடுத்து விடக்கூடாதே என்ற அச்சத்தில், மூச்சை சற்று அடக்கிக் கொண்டு விரைந்து சென்று அந்த முத்தையும் எடுத்துக்கொண்டு கயிரை வேகமாக அசைத்தான். நாங்கள் கயிரை வேகமாக மேல் இழுத்தோம். என் மகன் தண்ணீரின் மேல் வந்தவுடனே என்னைப் பார்த்தான், கைகளை நீட்டினான், நானும் என் கைகளை நீட்டினேன். அவன் என் கைகளில் அம்முத்தைத் தந்து விட்டு அப்பா என்றான். அவன் வாய் வழியாகவும், மூக்கு வழியாகவும், காது வழியாகவும் இரத்தம் கொட்டியது. அவன் பிணமானான், என் வாழ்வே இருண்டுவிட்டதையா. ஆகையால் இம்முத்தை என் மகனைப் போல நேசித்துப் பாதுகாத்தேன். என் மகனுடைய உயிர்தான் அதன்விலை. ஆகையால் இந்த முத்துக்கு விலையே இல்லை. இது விலையேறப் பெற்றது என்று கூறி கண்ணீர் சிந்தினார். ஒரு கணம் போதருடைய மனம் உடைந்தது. கண்களில் கண்ணீர் ததும்பியது. மறுகணம், போதகர் ஒருவாறு தன் உள்ளத்தைத் தைரியப்படுத்திக் கொண்டு வயோதிகரிடம் இச்சம்பவத்தின் மூலம் கிறிஸ்துவின் இரட்சிப்பை விளக்கிக் கூறத் துவங்கினார்.

ஐயா, இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு, பாவத்தில் வாழுகின்ற மனிதனை மீட்பதற்காக, பாவத்திலும், துன்மார்க்கத்திலும், அழிகின்ற மனிதனுக்க வாழ்வு கொடுப்பதற்காக, தெய்வம் மானிடனாக இயேசு என்ற பரிசுத்த நாமத்தில் இந்த உலகத்தில் பிறந்து, 33½ ஆண்டுகள் வாழ்ந்து முடிவில் மனுக்குலத்துக்கு வாழ்வு கொடுப்பதற்காக மனிதனின் பாவத்திற்கு அவன் அடைய வேண்டிய தண்டனையைத் தாமே ஏற்றுக் கொண்டு, சிலுவையின் தன் ஜீவனை விட்டார். ஆயினும் மூன்றாம் நாளில் மகிமையோடு உயிர்த்தெழுந்தார். இன்றும் உயிரோடிருக்கிறார், அந்த இயேசு சிலுவையில் தொங்கி, அவர் சிந்தின இரதத்தத்தின் மூலமாக நம் பாவங்கள் மன்னிக்கப்படுவதே இரட்சிப்பு. அவர் சம்பாதித்து வைத்த இரட்சிப்பு எல்லோருக்கம் இலவசம்; அது விலையேறப்பட்ட இரட்சிப்பு. என்று அவருக்கு எடுத்துக் கூறி இப்போதகர் மீனவ நண்பரை கிறிஸ்துவின் இரட்சிப்புக்கு நேராக வழி நடத்தினார்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, இன்றைக்கு இந்த இலவசமான விலையேறப்பட்ட இரட்சிப்பை நாம் பெற்று அனுபவிக்கின்றோமா? நாம் பெற்ற இந்த இரட்சிப்பை, இதை அனுபவிக்காத மக்களுக்கு பகிர்ந்து கொடுக்க வேண்டாமா? இது என் மீது விழுந்த கடமை இதை செய்யாவிட்டால் எனக்கு ஐயோ என்று பரிசுத்த பவுல் கூறுகிறார். இது ஒரு சங்கத்தின் கடமையோ, குடும்பத்தின் கடமையோ அல்லது ஒரு ஸ்தாபனத்தின் கடமையோ அன்று ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமையாகும் என் ஊழியத்தைச் செய்கிறவர்களை என் பிதா கனம் பண்ணுவார் என்று இயேசு சொன்னார். முதலாவது நாம் இரட்சிக்கப் படவேண்டும். இயேசுவின் இரத்தத்தினால் கழுவபட வேண்டும். "இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித்தப்பித்துக் கொள்வோம்?" என்று பவுல் கூறுகிறார். ஆகையால் இந்த விலையேறப்பட்ட இரட்சிப்பைக் குறித்து நாம் அசட்டை பண்ணாமல் அதை நமக்குச் சொந்தமாக்கிக் கொண்டு, இந்த இரட்சிப்பை அனுபவியாத மக்களுக்கு, இதைப் பகிர்ந்து கொடுத்து ஊழியம் செய்து கிறிஸ்து இயேசுவின் நாமத்தை உயர்த்துவோமாக.

We are saved by God's mercy,

not by our merit

by Christ's dying,

not by our doing!

வேஷம் ஒரு நாள் கலையாதோ!!

தென் அமெரிக்காவிலுள்ள அமேசான் நதி பாயும் பயங்கரமான வெப்ப மண்டலக் காடுகளில் விலங்குகள் அதிகம் வாழ்கின்றன. இந்நதிக்கரை ஓரத்தில் அழகும் திடகாத்திரமுமான மிட்டா என்ற ஒரு வெள்ளாடு வாழ்ந்து வந்தது. கொழுமையான பகுதியாக இருந்தபடியினாலும் கொடிய விலங்குகள் அப்பகுதியில் சற்று குறைவாக இருந்த காரணத்தினாலும் அச்சமின்றி மனநிம்மதியுடன் வாழ்ந்து வந்தது. என்றாலும் அதன் உள்ளத்தில் ஒரு தீராத ஆசையும், அதன் காரணமாக ஏற்பட்ட கவலையும் இருந்தது. நாட்கள் செல்லச் செல்ல இந்த ஆசையும் சிறிது சிறிதாக வளர்ந்து பேராசையாக மாறி, கவலை அதன் இருதயத்தை வாட்டிது. இறுதியில் ஒரு நாள் அதிகச் சோர்புடன் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தது. அப்பக்கமாக தந்திரமும், திருக்குள்ளமும் கொண்ட சிம்ரோ என்ற குரங்கு வந்தது. இருவரும் நெடுநாட்களாக நெருங்கிய நண்பர்களாக இருந்து வந்தனர். மிட்டா வருத்தத்துடன் மிகச் சோர்வாக இருப்பதைச் சிம்ரோ கண்டதும். "மிட்டா அண்ணா! என்ன இன்று அதிக சோர்ந்து காணப்படுகிறாய்? என்ன நிகழ்ந்தது?" என்று வினவியது. உடனே மிட்டா "ஒன்றுமில்லை சிம்ரோ. எனக்கு பல நாட்களாக உள்ளத்தில் ஒரு ஆசை. ஆனால் எனக்கும் வயதாகிக் கெண்டே போகிறது அந்த ஆசை, நிறைவேறாதா என்ற கவலையில் தான் நான் இப்படி இருக்கிறேன்" என்றது. உடனே சிம்ரோ நான் உன்னுடைய நண்பன் தானே? உன்னுடைய இன்ப துன்பங்களில் எனக்கும் பங்குண்டல்லவா? மேலும் உன் கவலையை என்னிடம் சொல், என்னால் முடிந்த உதவியை உனக்குச் செய்வேன் என்று கூறியது.

யாரிடம் நம் கவலையை கூறுவது என்று ஏங்கிக் கொண்டிருந்த மிட்டா மெதுவாகத் தன் வாயைத் திறந்து, "ஒன்றுமில்லை சிம்ரோ, எனக்கு அதிக நாட்களாகக் காட்டுக்கு ராஜாவாகிய சிங்கமாக

மாறவேண்டும் என்ற ஆசை இருக்கிறது. சிங்க ராஜாவைப் பார்த்தால் எல்லா மிருகங்களும் கிடுகிடென்று நடுங்குகின்றன. காலில் விழுந்து வணங்குகின்றன. அதற்குதான் எத்தனை கௌவரம் பார்த்தாயா? உம், நான் என் செய்வது என்று கூறி பெருமூச்சு விட்டு ஏங்கியது. உடனே சிம்ரோ மிட்டாவைப் பார்த்து, "இதற்காகவா கவலைப்பட்டு ஏங்குகிறாய், பயப்படாதே நீ சிங்கமாவது மிக சுலபம். அதற்கு நான் வழி சொல்லித் தருகிறேன். என்றது உண்மையாகவா? என் ஆசை நிறைவேறுமா?" என்றது மிட்டா. அத்துடன், தான் சிங்கமாவதற்கு உரியவழியைச் சொல்லித் தருமாறும் சிம்ரோவிடம் கேட்டது.

"சரி நீ இப்படி உட்கார் மிட்டாய், நான் சொல்லுகிற படியெல்லாம் நீ செய்ய வேண்டும்" என்றது சிம்ரோ. "திட்டமாக நீ சொல்லுகிறபடியெல்லாம் நான் செய்வேன்" என்றது மிட்டா. சிம்ரோ ஒருவாறு தன்னை சரி செய்து கொண்டு "முதலாவது நீ சிங்கராஜாவாக மாறவேண்டுமானால் சிங்கராஜாவைப் போல மற்ற மிருகங்கள் முன் ராஜநடை போட வேண்டும்" என்றது. மிட்டாவும் சரி, நான் நாளையே அப்படி செய்கிறேன் என்று கூறி விட்டு மிக உற்சாகமாக சென்றது. மறுநாள் காலை பொழுது விடிந்ததும் மிட்டா வேகமாக மற்ற மிருகங்களெல்லாம் இரைதேடும் இடத்துக்குச் சென்றது. அவைகள் மூன்பாக அங்குமிங்குமாக சிங்கத்தைப் போல நடந்தது. எல்லா மிருகங்களும் சற்று வியப்புடன் மிட்டாவைப் பார்த்து, மிட்டாவுக்கு என்ன வந்தது? நடைசிங்கராஜாவைப் போல் இருக்கிறதே , ஏன் இந்த வெள்ளாடு இப்படிச் செய்கிறது என்று வியப்புடன் சிரித்தன. மிட்டாவுக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன செய்வது என்றே தெரியவில்லை. ஒன்றும் எனக்குப் பயப்படவில்லை, எல்லாம் என்னைப் பார்த்து நகைக்கிறதே என்ற துக்கத்துடன் மீண்டும் பழைய இடத்தில் வந்து கவலையுடன் அமர்ந்தது.

அன்புச் சகோதரர்களே, இன்று நம்மில் அநேகர் கூட இந்த வெள்ளாடு போல் தோற்றத்தில் பாவிகளாக இருந்து கொண்டு சிங்கம்போல, ஒரு கிறிஸ்தவனைப் போல வேஷம் தரித்துக் கொள்ளுகிறோம். உன் அந்தரங்க வாழ்க்கை தேவனுக்குத் தெரியும், உலகத்துக்கும் தெரியும். வெள்ளாடு வெள்ளாடுதான் பாவி பாவிதான். நடையை மட்டும் மாற்றினால் பரிசுத்தவானாக முடியாது.

அடுத்தநாள் மீண்டும் சிம்ரோ அந்த வழியேவந்தபோது மிட்டா மீண்டும் துக்கத்துடன் அந்த இடத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டு "என்ன அண்ணா! மீண்டும் கவலையுடன் இருக்கிறாய்" என்று வினாவியது. என்னப்பா இது! நேற்று மாலை நீ சொல்லியபடியே நான் செய்துபார்த்தேன். எல்லாம் என்னைப் பரியாசம் பண்ணி ஏளனமாகச் சிரிக்கத் தொடங்கிவிட்டன. ஒன்றும் பயப்படவில்லை என்றது. உடனே

சிம்ரோ நீ சிங்கத்தை போல் நடந்தால் மாத்திரம் போதாது. அதைப்போல் முழிக்கவும் வேண்டும் என்றது. சரி அவ்வளவுதானே அப்படியே செய்கிறேன் என்றது மிட்டா. அடுத்த நாள் அந்த மிருகங்கள் இருக்கும் இடத்துக்குச் சென்று, சிங்கத்தைப் போல ஒரு மாதிரி முழித்தது. அருகில் இருந்த மிருகங்களெல்லாம் சற்று நேரம் கவனித்தன. பின்பு என்னடா இது, நேற்று வெள்ளாடு ஒரு மாதிரியாக நடந்தது. இன்று ஒரு மாதிரி முழிக்கவும் செய்கிறதே இதற்கு என்ன நேர்ந்தது ஒன்றும் புரியவில்லையே என்று ஏளனமாகப் பார்த்தன. மிட்டாவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. மீண்டும் இருப்பிடம் வந்து கவலையுடன் அமர்ந்தது.

இந்த வெள்ளாடுபோல தான் இன்று நம்மில் அநேகர் உண்மைக் கிறிஸ்தவர்கள் போல கிறிஸ்தவ நடைபோடுகின்றோம். நல்லவர்களைப்போல முழித்தும் பார்க்கிறோம், ஆனால் நம் உள்ளந்திரியங்களை ஆராய்கிற தேவனுக்கு முன்பாக அதை மறைக்க முடியாது. எத்தனை நாட்கள் தான் இந்த மாய்மால வேடம் நீடிக்கும்! வெள்ளாடு வெள்ளாடுதானே!

மீண்டும் கலையுடன் மிட்டா அமர்ந்திருப்பதைக் கண்ட சிம்ரோ "என்ன அண்ணா! இன்னும் கவலையுடன் உள்ளாயே; என்ன நடந்தது" என்று வினவியது. "அட போப்பா, நீ சொன்னபடியெல்லாம் நான் நேற்று மாலை செய்து பார்த்தேன். ஆனால் ஒரு மிகமும் எனக்குப் பயப்படவில்லை. எல்லாம் என்னைப் பரியாசம் பண்ணுகின்றன" என்று கவலையோடு கூறியது மிட்டா. உடனே சிம்ரோ, "என்னை அண்ணா! சிங்கத்தைப்போல் நடந்தாலும், முழித்தாலும் மாத்திரம் போதாது அதைப்போல நீ கொர்ச்சிக்க வேண்டும். அப்போது தான் அக்குரலைக் கேட்டதும் எல்லா மிருகங்களும் மிரண்டு ஓடி விடும்" என்றது.

அடுத்த நாள் மிட்டா மிகவும் உற்சாகத்துடன் மிருகங்கள் இருக்கும இடத்துக்குச் சென்றது. மற்ற மிருகங்களெல்லாம் மேய்ந்து கொண்டிருக்கும் போது, மிட்டா மாத்திரம் தனியே ஓர்மேட்டின்மேல் நின்று கொண்டு ஒருவாறு தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டு சிங்கம் கொர்ச்சிப்பதைப்போல் கொர்ச்சித்தது. இக்குரலைக் கேட்டதும், எல்லா மிருகங்களும் சத்தம் வந்த திசையை நோக்கித் திரும்பிப் பார்த்தன். ஆனால் சிங்கத்தையோ காணவில்லை. மாறாக வெள்ளாடு நிற்பதைக் கண்டதும் மற்ற விலங்குகளெல்லாம் ஏளனமாகச் சிரித்தன. மிட்டா சிங்கத்தைப் போல் ராஜநடை போட்டுக் கொண்டு ராஜமுழி முழித்தது. மிருகங்களெல்லாம் பார்த்தன. என்னடா, இந்த வெள்ளாடு, சிங்கத்தைப் போல நடக்கிறது. சிங்கத்தை போல முழிக்கிறது, சிங்கத்தைப் போல கொர்ச்சிக்கிறது. இதற்கென்ன பைத்தியமா? என்று மிட்டாவைப் பார்த்து

ஏளனமாகச் சிரித்தன. மிட்டா மிக வெட்கமடைந்ததாய் அதிக துக்கத்துடன் தன்வீடு திரும்பியது.

நண்பர்களே, இன்று கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களாகிய நம்மில் சிலர் இப்படித் தானே? இந்த வெள்ளாட்டைப் போல கிறிஸ்தவ நடைபோடுகிறோம் பக்திமானைப் போல முழிக்கிறோம், மிட்டா உருமியது போல் நாமும் பாடிப் பார்க்கிறோம். பேசிப்பார்க்கிறோம். என்ன தான் செய்தாலும் மனந்திரும்பாத நீ வெள்ளாடு தான், எத்தனை நாட்கள் தான் இந்த மாயமான வாழ்க்கை வாழப் போகிறாய்?

மீண்டும் வருத்தத்துடன் மிட்டா உட்கார்ந்திருப்பதைக் கண்ட சிம்ரோ என்னப்பா இப்படி வருத்தத்துடன் இருக்கிறாய் என்ன நடந்தது இன்னும் நீ காட்டுக்கு ராஜாவாகவில்லையா? என்றது. உன் பேச்சைக் கேட்டால் பைத்தியக்காரப் பட்டம் வாங்க வேண்டியது தான். ''என்னைப் பார்த்து எல்லாம் சிரிக்கிறதப்பா'' என்றது. ''மிட்டா, மிட்டா நீ நினைக்கிற படி சுலபமாக சிங்கமாகி விட முடியுமா? சரி இன்னும் ஒன்று சொல்லுகிறேன் கேள்'' என்றது சிம்ரோ. சரி சொல்லேன், அதையும் தான் செய்து பார்க்கிறேன்'', என்று கூறியது மிட்டா.

சிம்ரோ, மிட்டாவிடம் ''நீ சிங்கத்தைப் போல நடந்தால் போதாது, முழித்தால் போதாது, கெர்ச்சித்தாலும் போதாது நீ சிங்கத்தைப் போல மாமிசமும் சாப்பிட வேண்டாமா'' என்றது. ஐயோ நான் எப்படி மாமிசம் சாப்பிட முடியும், நான் தான் சாப்பிடக் கூடாதே, சாப்பிட முடியாதே வேண்டாம்பா என்னால் இதை செய்ய முடியாது. என்று கூறியது ''மிட்டா நீ எல்லாம் செய்து விட்டாய் சிங்கமாக மாற வேண்டுமானால் சிங்கத்தை போல மாமிசம் சாப்பிடத்தான் வேண்டும் என்ன செல்கிறாய்? என்றது. மிட்டாவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. கடைசியில் எப்படியும் சிங்கமாகி விட வேண்டும் என்ற தீராத ஆசையில் சரி என்று ஒப்புக் கொண்டது.

மறு நாள் காலை இந்த வெள்ளாடு செத்துக் கிடந்த. ஒரு மாட்டின் தொடையைக் கடித்து இழுத்துக் கொண்டு மிருகங்கள் இருக்கும் இடம் நோக்கிச் சென்றது. ஒரு பாறையின் மேல் நின்று கொண்டு சிங்கத்தை போலக் கெர்ச்சித்தது. எல்லா மிருகங்களும் ஏறிட்டு பார்த்தன. மிருகங்களெல்லாம் தன்னைப் பார்ப்பதைக் கண்ட மிட்டா மெதுவாக மீண்டும் கெர்ச்சித்தது. சிங்கத்தைப் போல ராஜ நடையும் நடந்தது. சிங்கத்தைப் போல திருதிருவென விழித்தது. பின் கீழே கிடந்த கறித்துண்டை எடுத்து கடித்தது. அங்குமிங்குமாக இழுத்தது விலங்குகள் எல்லாம் வியப்புடன் மிட்டாவை பார்த்தன. இந்த வெள்ளாட்டுக்குப்

பைத்தியம் தலைக்குமேல் ஏறிவிட்டது போலும். சிங்கத்தைப் போலவே நடக்கிறது. விழிக்கிறது, கெர்ச்சிக்கிறது, கறியும் சாப்பிடத் துவங்கி விட்டது. இதென்ன பைத்தியம் என்று பேசிக் கொண்டு மீண்டும் இரை தேடச் சென்று விட்டன.

இன்று நம்மைப்போன்ற அநேக கிறிஸ்தவர்கள் இந்த வெள்ளாட்டைப்போல கிறிஸ்தவர்களாக மாறிவிடலாம் என்று பக்திமான்களைப் போல் உடுத்திக் கொண்டு, கையில் வேதத்தை வைத்துக் கொண்டு பார்வைகளை மாற்றிக் கொண்டு அலைவதோடு பரிசுத்த நற்கருணையில் பங்கு கொண்டு பரலோக ராஜ்யத்திற்குப் பாத்திரவானாக மாறிவிடலாம் என்று மிட்டா கறி சாப்பிட்டது போல ராப்போஜனம் எடுக்கிறார்கள். நடக்காது சகோதரனே. நற்கருணையில் பங்கு பெற்றாலும் மாறிவிடமுடியாது. உன் உள்ளம் மாறவேண்டும். உன்னை இந்த உலகமும் அறியும் தேவனும் அறிவார்.

இன்று நம்மைப்போன்று அநேக கிறிஸ்தவர்கள் இந்த வெள்ளாட்டைப்போல கிறிஸ்தவர்களாக மாறிவிடலாம் என்று பக்திமான்களைப் போல் உடுத்திக் கொண்டு, கையில் வேதத்தை வைத்துக் கொண்டு பார்வைகளை மாற்றிக் கொண்டு அலைவதோடு பரிசுத்த நற்கருணையில் பங்கு கொண்டு பரலோக ராஜ்யத்திற்குப் பாத்திரவானாக மாறிவிடலாம் என்று மிட்டா கறி சாப்பிட்டது போல ராப்போஜனம் எடுக்கிறார்கள். நடக்காது சகோதரனே. நீ நற்கருணையில் பங்கு பெற்றாலும் மாறிவிடமுடியாது. உன் உள்ளம் மாறவேண்டும். உன்னை இந்த உலகமும் அறியும் தேவனும் அறிவார்.

மிட்டா வெட்கி விரைத்து என்ன செய்வது என்று தெரியாமல் மெதுவாகப் பாறையைவிட்டுகீழே இறங்கி மிக சோர்வுடன் தன் இருப்பிடம் வந்து ஆழ்ந்த கவலையுடன் படுத்திருந்தது. மாலைப்பொழுது அந்தப் பக்கமாக சிம்ரோ வந்தது. படுத்துக்கிடந்த மிட்டாவுக்கு சிம்ரோவைப் பார்த்ததும் ஆத்திரமும் கோபமும்வந்தது. ஆயினும் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு வேறுபக்கமாக தலையை வைத்துப் படுத்துக் கொண்டது. சிம்ரோ மிட்டாவைப் பற்றி நன்கு புரிந்துகொண்டது. கோபத்துடன் இருப்பதைக்கண்ட சிம்ரோ மெதுவாக அதன் அருகில் சென்று அமைதியாக நின்று மெதுவாக அதன் அருகில் சென்று அமைதியாக நின்று மெதுவாக அதன் வாயைத்திறந்து “மிட்டா என்மீது கோபமா? நான் உனக்கு அப்படி என்ன செய்துவிட்டேன் என்னைச் சற்றுத் திரும்பிப் பாரேன், என்றது. மிட்டாவும் தன் கோபத்தை சற்று அடக்கிக் கொண்டு, நீ சொன்னபடியெல்லாம் நான் செய்து பைத்தியக்காரனாகி விட்டேன் எல்லாம் என்னைப் பார்த்து

நகைக்கிறார்கள், இத்தனையும் உன்னால் தானே என்றது. கவலைப்படாதே நான் உனக்கு ஒரு நல்ல யோசனை கூறுகிறேன். நீ அதைப்போல் செய்தால் நிச்சயமாக சிங்கமாகி விடலாம் நான் சொல்லுகிறபடி மட்டும் நீ தவறாமல் செய்யவேண்டும் என்றது சிம்ரோ. சரி இதுதான் கடைசி நீ சொல்லுகிறபடியெல்லாம் நான் செய்கிறேன், என்றது மிட்டா.

கடைசியாக மிட்டா நீ செய்யவேண்டியது என்ன தெரியுமா, கவனமாகக் கேள். (Lion) சிங்கம் என்று ஒரு அட்டையில் எழுதி உன் கழுத்தில் போட்டுக் கொள்ள வேண்டும். ஒரு கறித்துண்டை உன் வாயில் கவ்விக் கொள்ளவேண்டும். நான் உன்னைச் சிங்கங்கள் வாழ்கிற காட்டுக்கு அழைத்துச் செல்வேன். அங்கு நான் உன்னை ஒரு உயர்ந்த பாறையின் மேல் நிற்கச் செய்வேன் கீழே சிங்கக் கெபியில் சிங்கங்கள் படுத்திருக்கும். நான் உம் ஆகட்டும் என்று சொன்னதும் நீ சிங்கத்தைப் போல கெர்ச்சிக்க வேண்டும். நடை போடவேண்டும். கண்களை உருட்டி அந்த சிங்கங்களைப் பார்க்கவேண்டும். கறியை வாயில் கவ்வி அங்குமிங்குமாக கடித்து விழுங்க வேண்டும் சிங்கங்கள் உனைக் கண்டதும், ஏதோ புதுவிதமான ஒரு சிங்கம் வந்துள்ளது என்று பயந்து ஓடிவிடும். அதற்குப் பின் நீதான் காட்டுக்கு ராஜா நான்தான் மந்திரி என்றது மிட்டாவுக்கு இதை சரி என்று ஒப்புக்கொண்டது.

இவ்வாறுதான் இன்று பல தீய சக்திகள் தீய குணம் படைத்தவர்கள், பிசாசின் உறவினர்கள் நமக்கு ஆலோசனை கூறுகிறார்கள். நாம் கூட அந்த ஆலோசனைக்கு இடம் கொடுத்து அதற்கு அடிமைகளாகி விடுகிறோம். நமக்கு நாமே அழிவைத் தேடிகொள்கிறோம். பல ஆலோசனைகள் கண்களுக்கு பகட்டையும், வாழ்க்கைக்கு உயர்வையும் தேடி தந்துநன்மை கிடைக்குமென்று ஆசைக்காட்டி விடுகின்றன. இதற்கு நாம் அடிமைகளாகி ஏமாந்து போகிறோம்.

இன்று எப்படியும் காட்டுக்கு ராஜாவாகிய விடுவேன் என்ற ஆர்வத்தில் மிட்டாவுக்கு இரவு தூக்கமே வரவில்லை. பொழுது விடிந்தது. மிட்டாவுக்கு ஒரே சந்தோஷம், சிம்ரோவை எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தது. காலை ஒன்பது மணிக்கெல்லாம் சிம்ரோ வந்தது சிம்ரோவைப் பார்த்ததும் மிட்டாவுக்கு ஒரே குஷி தாங்க முடியவில்லை "என்ன சிம்ரோ போகலாமா?" நான் ஆயத்தமாயிருக்கிறேன் என்று கூறிக்கொண்டே கழுத்தில் சிங்கம் (Lion) என்று எழுதப்பட்ட பலகையை மாட்டிக்கொண்டது. "சரி இப்போது உன்னையும், இந்த பலகையையும் பார்த்தால் சிங்கம் என்று புரிந்துகொள்வார்கள். என் பின்னாலேவா" என்று கூறிக்கொண்டே சிம்ரோ முன் நடந்தது. வெகு கம்பீரமாக நடந்தது.

அடர்ந்த காட்டிற்குள் சென்றாகிவிட்டது. "என்னப்பா போய்க்கொண்டேயிருக்கிறாய், எனக்கு கால்கள் வலிக்கிறது" என்றதுமிட்டா "இதற்குள்ளதாகவே சோர்ந்து போகிறாயே, நீ காட்டுக்கு ராஜாவாகப்போகிறாயே நட" என்று கூறியது. சிம்ரோ சோர்பையும் பொருட்படுத்தாமல் அதன் பின்னே நடந்து சென்றது மிட்டா. நண்பகல் பன்னிரண்டு மணியாகிவிட்டது. அடர்ந்த காட்டிற்குள் வந்த சிம்ரோ ஒரு சிங்கக்கெபியின் மேலுள்ள ஒரு பாறையில் மிட்டாவை நிறுத்தி, கீழேபார் என்றது. மிட்டா மெதுவாகக் குனிந்து கீழேபார்த்தது, அதற்கு கால்களெல்லாம் நடுங்கத் துவங்கியது. வியர்த்தது, கண்கள் இருண்டது போல் தோன்றியது. கீழே சிங்கங்களும், சிங்கக் குட்டிகளும் பசியோடு உலாவிக் கொண்டிருந்தன.

சிம்ரோட் மிட்டாவைப் பார்த்து "நீ இங்கேயே இரு. நான் இந்த மரத்தில் ஏறிக் கொள்கிறேன். உம் நடக்கட்டும் என்றதும் நீ முதலாவது சிங்கத்தைப் போலக் கெர்ச்சிக்க வேண்டும், உன் குரலைக் கேட்டதும், ஏனைய சிங்கங்கள் எல்லாம் உன்னை ஏறிட்டு பார்க்கும். ஏறிட்டுப் பார்த்ததும் நீ ஒரு ராஜமுழி முழித்து அங்குமிங்குமாக சிங்கத்தைப் போல் ராஜநடை நடந்து கறியை நன்றாகச் சாப்பிட வேண்டும். மற்ற சிங்கங்கள் பயந்து அங்குமிங்குமாக ஓடி விடும். அதன்பின் நீதான் காட்டுக்குராஜா நான் தான் மந்திரி" என்றது சிம்ரோ.

மிட்டாவுக்கு உள்ளார பயம்தான் என்றாலும் ஒருவாறு சமாளித்துக் கொண்டு சிங்கங்களைப் பார்த்து ஆவேசத்துடன் கெர்ச்சித்தது. சத்தம் வந்த திசை நோக்கி கெபியில் கிடந்த சிங்கங்களும், குட்டிகளும் தலையை உயர்த்தி பார்த்தன. மேலே கெம்பீரமாகக் கழுத்தில் (Lion) என்ற போர்டு தொங்க ஒரு அருமையான வெள்ளாடு நிற்பதைக் கண்டன. பசி, நாவிலிருந்து நீர்சொட்டத் தொடங்கியது. மீண்டும் கெர்ச்சித்து கண்களை உருட்டி அங்குமிங்குமாக நடந்து கொண்டு அழுகிக் கிடந்த மாமிசத்தைக் கடித்து இழுத்தது. சிங்கங்கள் எல்லாம் சற்று கவனமாகக் கவனித்தன. அதில் ஒரு ஆண்சிங்கம், என்னடா உருவத்தைப் பார்த்தால் வெள்ளாடுபோல் தெரிகிறது. அதன் நடை முழிகளை பார்த்தால் நம்மைப்போல் தெரிகிறதே என்றது. பின் அச்சிங்கம் மற்ற சிங்கங்களைப் பார்த்து நீங்கள் எல்லாரும் இங்கேயே இருங்கள், நான் மட்டும் இந்தப் பக்கமாக பாறையைச் சுற்றிச் சென்று பார்த்துவிட்டு வருகிறேன் என்று சொல்லி மெதுவாகப் பின்பக்கமாகச் சென்றது. மரத்திலிருந்த குரங்கு சிம்ரோ சிங்கம் வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தது. வெள்ளாடு சிங்கம் வருவதை அறியாமல் அங்கும் இங்குமாக நடந்து கொண்டிருந்தது.

சிங்கம் மெதுவாக வெள்ளாட்டின் பின் புறம் வந்து கெம்பீரமாகக் கெர்ச்சித்தது. வெள்ளாடு திரும்பிப் பார்த்தது சிங்கம் நிற்பதைக் கண்டது அவ்வளவுதான். கால்களெல்லாம் கிடுகிடென நடுங்கியது. தலை விர்ரென்று சுற்றியது. அவ்வளவுதான் மேலிருந்து அப்படியே சிங்கக் கெபிக்குள் ஓவென்று அலறிக் கொண்டே விழுந்தது. கணப்பொழுது கூட ஆகவில்லை, பசியுடன் இருந்த சிங்கங்களும் சிங்கக் குட்டிகளும் கால் வேறு, மறுநிமிடம் அதன் வாடை கூட இல்லாமல் மறைந்து விட்டது.

கிறிஸ்தவ நண்பர்களே! இன்று நம்மில் அநேகர்கூட கிறிஸ்துவை உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு அவர் அடிச் சுவட்டிலே நாம் நடக்காதபடி நல்லவர்களைப் போல, பக்திமான்களைப் போல, ஊழியக்காரரைப் போல நடந்து கொண்டும் பார்த்துக் கொண்டும் பரிசுத்த நற்கருணையில் பங்கும் கொண்டும் அலைகிறோம். நம் உள்ளான, அந்தரங்க வாழ்க்கையை தேவன் அறிவார். அச்சமுதாயமும் அறியும். இன்று உலகத்தை ஏமாற்றிவிடலாம் என்று அலைகிறோம் நியாயத் தீர்ப்பின் நாள் வேஷம் கலைக்கப்படும் நாள். நம் முகமூடி கிழிக்கப்படும் நாள் நெருங்கி விட்டது. நீ தப்ப முடியாது. அலறினாலும், எங்கு ஓடினாலும், தப்பமுடியாது. அக்கினியும், கந்தகமும் எரிகின்ற கடலிலே நீ தள்ளப்படுவாய்.

மனந்திரும்பு மாய்மாலக்காரனே! மனந்திரும்பு!!

"துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக் கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார். நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக் கடவன், அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்." (ஏசா.55:7)



நாளை உன்னுடையதல்லவே!!

அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள கலிபோர்னியா மாநிலத்திலுள்ள சான்டியாகோ என்ற பட்டணத்தில் ஒரு சிறந்த புகழ்பெற்ற செல்வக் குடும்பத்தில் பிறந்தவள் தான் சீமாட்டி மெர்லின். இவளுடைய தந்தையும் தாயும் சுதந்திரப் போராட்டத்தின் போது எதிரிகளின் படைகளால் கொலை செய்யப்பட்டனர், தாய் தந்தையை இழந்த காரணத்தினால் இவளுடைய தந்தையின் உடன்பிறந்த சகோதரியாகிய மெர்சி மிகச் சிறப்புடன் இவளை வளர்த்து வந்தாள். உலகத்தின் இன்ப துன்பங்கள் இன்னதென்று தெரியாமலே வளர்ந்து வந்தாள். இவள் ஒரு பிரசித்தி பெற்ற நாட்டியக்காரியாகவும் திகழ்ந்தாள். மெர்லினுடைய அத்தையும் மிக ஆடம்பரமான வாழ்வையே விரும்புவள். உல்லாச வாழ்க்கையே வாழ்ந்து வந்தனர். பொழுது போக்குக்காக அவர்கள் குதிரைப்பந்தயம், நாட்டிய அரங்கம் திரைப்படம், உல்லாசப்பயணம் இவ்வாறு பற்பல இடங்களுக்குச் செல்வதுண்டு. ஆனால் தங்கள் ஆன்மீக வாழ்க்கையை எண்ணிப் பார்த்ததோ, உணர்ந்து பார்த்ததோ இல்லை. ஆலயம் செல்லும் அளவுக்கு அவள் உள்ளம் பக்குவப்படவில்லை. உலகம்தான் சதா என்ற நிலையில் வாழ்ந்து வந்தனர்.

இப்படிப்பட்ட நாட்களில் அவர்கள் வாழ்ந்த சாண்டி யாகோ பட்டணத்தில் சீர்திருத்த ஆலய குருவானவர் ஒரு எழுப்புதல் கூட்டம் ஒழுங்குச் செய்தார். பெரிய பெரிய போஸ்டர்கள் எல்லாம் தெருக்கள் எங்கும் ஒட்டப்பட்டன. ரோடுகள் சந்திக்கும் இடமெல்லாம் பெரிய போஸ்டுகள் எல்லாம் தெருக்கள் எங்கும் ஒட்டப்பட்டன. ரோடுகள் சந்திக்கும் இடமெல்லாம் பெரிய போஸ்டுகள் வைக்கப்பட்டன.

பத்திரிகைகள் ஒருபுறம் எழுப்புதல் கூட்டத்தைப் பற்றி தொடர்ந்து பிரசுரித்துக் கொண்டிருந்தன. கூட்டத்தில் ஆப்பிரிக்காவில் பல ஆண்டுகளாக மிஷனெரியாக, நரமாமிச பட்சிணிகள் மத்தியில் பணிபுரிந்த மிஷனெரி ஒருவரும், தேவ ஆவியைப் பெற்று, ஆத்துமாக்களின் மீது பாரம் கொண்ட பிரைட் (Bright) என்ற ஊழியரும் செய்தி கொடுப்பதாக அறிவிக்கப்பட்டது.

கூட்டமும் குறிப்பிட்ட நாளில் ஆரம்பமாயிற்று. கூட்டங்கள் திரள் திரளாக கூட்டங்களில் பங்குபெற்று தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுத் திரும்பினர். கூட்டங்களில் ஆவியானவர் வல்லமையாய் இறங்கினபடியால் அழுகையும், கூக்குரலும், உண்டாயிற்று கொலை பாதகரும் திருடர்களும் மனந்திரும்பி சாட்சி கொடுக்கத் துவங்கினர். எங்கு பார்த்தாலும் இந்தக் கூட்டத்தைப் பற்றியே பேச்சுத்தான். சொல்லப் போனால் நாடே குலுங்கிற்று என்று தான் சொல்ல வேண்டும்.

இக்கூட்டங்களைப் பற்றிக் கேள்விப்பட்ட மெர்லினுக்கும் போவேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. ஆலயம் பாதிரியார், பிரசங்கம் என்றாலே சற்றேனும் விரும்பாத மெர்லினுக்கு ஒரு மாதிரியாகத்தான் இருந்தது. என்றாலும் எல்லோரும் பிரமாதம்மாகப் பேசுகிறார்களே. நாமும் ஓர்நாள் போய்தான் பார்ப்போமா என்று தன்னுடைய அத்தை மெர்சிக்கு சொல்லாமலேயே காரை எடுத்துக்கொண்டு அக்கூட்டம் நடக்கும் இடத்தை நோக்கிச் சென்றாள். பிடிக்காவிட்டால், கூட்டம் சுவைக்காவிட்டால் இடையிலேயே எழுந்து வந்துவிடலாம் என்று முன்பே ஆலோசித்துத் தன்னுடைய அழகிய காரை சுலபமாக எடுத்துச் செல்லும்படி வாசலுக்கு அருகிலேயே நிறுத்திவிட்டு கூட்டம் நடை பெற்ற பந்தலை நோக்கி நடந்தாள். செய்தி கேட்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் வந்த மக்கள் மெர்லினையும் இடித்து தள்ளிக் கொண்டு சென்று வசதியான இடங்களில் அமர்ந்தனர். மெர்லினும் பந்தலுக்கள் நுழைந்தாள். எங்கே உட்காருவது என்று சிந்தித்துக்கொண்டே மேடையின் அருகில் சென்றாள். முதல் வரிசையிலேயே ஒரு இடம் காலியாயிருந்தது. அதில் போய் அமர்ந்து கொண்டாள். எல்லாரும் அவளை வியப்புடன் பார்ப்பது போன்ற எண்ணம். சற்று அச்சமாகத்தான் தோன்றியது. என்றாலும் ஒருவாறு சமாளித்துக் கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தாள். அரைமணி நேரத்திற்கெல்லாம் அந்த பந்தல் நிரம்பிவழியத் துவங்கியது. மேடையில் வெண்மையான உடைதரித்த இரு ஆடவர் கையில் வாத்தியக் கருவிகளுடன் தோன்றினர். நாடக மேடையில் வாத்தியம் வாசிக்கும் நபர்களின் எண்ணம்தான் தோன்றியது.

அவளுக்கு முன் பின் இப்படிப்பட்ட கூட்டங்களுக்கு வந்துதான் பழக்கமில்லையே. இருவரும் வாத்தியக் கருவிகளை சரிசெய்து கொண்டு பாடல்களின் எண்ணைச் சொல்லி பாடத் துவங்கினர். பாடல்களைக் கேட்க மிக இனிமைதான் அதன் பொருளும் உள்ளத்தைத் தொடுவது போல் மெர்லினுக்குத் தோன்றியது மெதுவாகத் தலையைத் திருப்பி பக்கங்களில் இருப்பவர்களை கவனித்துப் பார்த்தாள். எல்லாரும் மிக ஆர்வத்துடன் கை தட்டி பாடலுடன் ஒன்றிப்போய் பாடுவதைக் கண்டாள். ஆனால் அவளுக்கோ இப்படிப்பட்ட பாடலைக் கேட்டோபாடியோ பழக்கமே இல்லை. ஆகையால் தன்னை யாரும் எதுவும் கேட்டுவிடக்கூடாதே என்ற பயத்தில் அப்படியே அமர்ந்திருந்தாள். பக்கத்திலிருந்த ஒரு வயது சென்ற தாய் தன்கையிருந்த பாடல் புத்தகத்தை மெதுவாக மெர்லின் முன் நீட்டினாள். என்ன செய்வது என்று அறியாது அப்புத்தகத்தை வாங்கிக் கொண்டு பாடலின் கண்களைச் செலுத்தினாள். பாடிய பாடலின் தலைப்போ இருண்ட நாட்கள் இனி வருதே முதல் வார்த்தையே இப்படி என்றதும் சற்று மனக் கஷ்டம்தான். ஏதோ கண்களைக் கட்டிக் காட்டில்விட்டது போல் அவளுக்குத் தோன்றியது. பாடல்களுக்கிடையே வெண்ணிற நரைத்தத் தலைமுடி கொண்ட ஒரு வயதுசென்றவரும் நடுத்தர வயது கொண்ட மற்றொருவரும் மேடையில் போட்டிருந்த மேஜையின் பின்புறம் வந்து சிரித்த முகத்துடன் அமர்ந்தனர். இவர்கள் தான் பிரபல பிரசங்கிமார்களாக இருப்பார்கள் என்று மெர்லின் தன் இருதயத்துக்குள் எண்ணிக்கொண்டாள்.

பாடல்கள் முடிந்தது. ஒருவர் வந்து வேதத்தைத் திறந்து யாக்கோபு 5-ம் அதிகாரத்தில் 1ம் வசன முதல் 9ம் வசனம் வரை ஐசுவரியவான்களின் நிலையையும் அவர்களின் முடிவையும் பற்றி வாசித்து முடித்தார். இவ்வசனங்களைக் கேட்ட மெர்லினுக்கு ஏதோ தன்னைப் பற்றி வாசிப்பது போல தோன்றியது, சற்று கலக்கமாகவே இருந்தது. பாடம் வாசித்த பின் போதகர் முன் வந்த கூட்டங்களுக்கான சில அறிவிப்புகளைக் கூறி ஆரம்ப ஜெபம் செய்துவிட்டு ஆப்பிரிக்காவிலிருந்து நம் மத்தியில் வந்திருக்கும் மிஷனெரி அவர்கள் சற்று நேரம் தங்கள் ஊழியர்களின் தேவைகளை எடுத்துரைப்பார். அதன்பின் சகோதரர் (Bright) அவர்கள் தேவனுடைய செய்தியைக் கொடுப்பார்கள் என்று கூறிவிட்டு தன் ஆசனத்தில் போய் அமர்ந்து கொண்டார். வெண்ணிற நரைத்தத் தலையுடன் கூடிய அனுபவம் முதிர்ந்த மிஷனெரி எழுந்து மெதுவாக மைக் முன் வந்து நின்று கொண்டு குழுமியிருந்த மக்களைப் பார்த்து ஒரு சிரிப்பு சிரித்தார். என்ன சொல்லப் போகிறாரோ என்று மக்கள் அவர் முகத்தைப் பார்த்த வண்ணம்

இருந்தனர் அவர் தன் வாய் திறந்து எஸ்தரின் சரித்திரம் நான்காம் அதிகாரம் 18ம் வசனத்தில் நீ தப்புவாய் என்று உன் மனதிலே நினைவுகொள்ளாதே என்ற பகுதியை வாசித்தார். இவ்வார்த்தைகளைக் கேட்டதும் மெர்லினுக்கு சம்மட்டிகொண்டு அடித்தது போல் இருந்தது. மீண்டும் அவர் "இந்தக் காலத்தில் நீ மவுனமாயிருந்தால் நீ தப்புவாய் என்று உன் மனதில் நினைவு கொள்ளாதே" என்ற வசனத்தின் பேரில் பிரசங்கிக்கத் தொடங்கினார். உலகத்தின் பற்பலபகுதிகளில் கிறிஸ்தவர்களும் அவர்கள் மத்தியில் பணியாற்றும் ஊழியர்களின் இன்னல்களையும் அவல நிலையையும் எடுத்துக்கூறி விட்டு ஆப்பிரிக்காவில் காப்பியர்கள் மத்தியில் தான் செய்யும் பணியைப் பற்றியும் கூறிக்கொண்டிருக்கும் போதே தன் மேல் சட்டையைக் கழற்றி தன் முதுகைத் திருப்பிக்காட்டி விட்டு, ஒருமுறை சுவிசேஷம் சொல்ல சென்ற போது அவரை அம் மக்கள் ஒரு மரத்தில் கட்டி வைத்து பழுக்கக்கரய்ச்சிய இருமபால் துளைத்திருந்ததையும் காட்டிவிட்டு, இது தான் "என் இயேசு ராஜாவின் பணியில் இவ்வுலகில் எனக்குக் கிடைத்த ஒருபரிசுச் சின்னம்" என்றார். அவர் கூறிய வார்த்தைகளையும் அவர் சரீரத்தில் காணப்பட்ட வடுக்களையும் கண்ட மக்கள் கண்களிலிருந்து கண்ணீர் வடியத் தொடங்கியது. இப்படிப்பட்ட காடுகளில் கிறிஸ்துவை அறியாத மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய உங்களில் யார் ஒப்புக் கொடுப்பீர்கள் என்று கூறிய போது பந்தல் முழுவதும் நிசப்தம் நிலவியது. அவர் கைகளை நீட்டிக் கூறியது மெர்லினுக்கு தன்னைச் சுட்டிக் காட்டியது போல தோன்றியது.

அவரைத் தொடர்ந்து பிரைட் (Bright) பேசத் தொடங்கினார். அவர் பரிசுத்த பவுல் எபிரேயருக்கு எழுதின நிருபம் 2-ம் அதிகாரம் நான்காம் வசனம் இத்தனைப் பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் எவ்வாறு தண்டனைக்கு தப்பித்துக் கொள்வோம் என்ற தலைப்பில் பேசத் தொடங்கினார். மக்கள் உள்ளங்கள் உடைய ஆரம்பித்தன. தேவ ஆவியானவர் மெர்லின் உள்ளத்திலும் பேச ஆரம்பித்தார் மேன்மையான இதயம் உடையத் தொடங்கியது. பாவம் என்றால் என்ன என்பதை அறியாதவன் உள்ளத்தில் பாவ உணர்வு ஏற்பட ஆரம்பித்தது. போராட்டம் ஏற்பட்டது. பிரசங்கியாரும் பாவத்தைக்குறித்தும் நீதியைக் குறித்தும் வன்மையாகக் கண்டித்துப் பேசலானார். மக்கள் புலம்பி அழ ஆரம்பித்தனர். ஒப்புக்கொடு நீ, அவர் பணிக்கு நீ தேவை இன்றே இயேசுவண்டைவா என்று கூறும் போது மெர்லினால் ஒப்புக் கொடுக்காமல் இருக்க முடியவில்லை. அவள்

எண்ணமெல்லாம் மறுநாள் இதேபட்டணத்தில் ஆயிரக் கணக்கான மக்களுக்கு முன் நாட்டியமாட வேண்டுமே, இன்று ஒப்புக் கொடுத்து விட்டால் நாளை எப்படி நாட்டியமாடமுடியும்? ஆகையால் தான் இருதயத்தைக் கல்லாக்கிக் கொண்டிருந்தாள், ஆனால் ஆவியானவரும் அவளை விட்டபாடில்லை . . . . யார் என்ன காரியமாய் போவான்? திறப்பின் வாசலில் நிற்கத் தக்கவன் யார்? யார்?" என அழைப்பு அவளை நோக்கி வந்து கொண்டே இருந்தது. முடியாது, முடியாது நாளை மட்டும் நான் நாட்டியமாடிவிட்டு என்னை ஒப்புக் கொடுத்து விடுகிறேன் என்று போராடிக் கொண்டிருக்கிறாள். ஆவியானவரும் தொடர்ந்து போராடுகிறார். கடைசியில் அவ்விடத்தில் இருக்க முடியாதவளாக தன் டைரியைத் திறந்தாள். அதில் Not today, not today, not today Tommorrow I will accept Jesus as my Saviour, இன்றல்ல இன்றல்ல, இன்றல்ல நாளை இயேசுவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்கிறேன்" என்று எழுதிவிட்டு போராட்டத்தோடு தேவ எச்சரிப்பை அசட்டை செய்துவிட்டு வெளியே வந்து தன் காரை எடுத்துக் கொண்டு வேகமாக ஓட்டி வருகிறாள். தேவ ஆவியானவர் மறுபடியும் அவள் உள்ளத்தில் நாளையல்ல இன்றே ஒப்புக் கொடு என்று போராடுகிறார். ஆனால் மெர்லினோ இல்லை முடியவே முடியாது, நாளை மட்டும் நாட்டியம் ஆடி விட்டு என்னை ஒப்புக்கொடுத்துவிடுகிறேன் என்று கூறிக்கொண்டு குழப்பத்தின் மத்தியில் தன் நிலை தெரியாது வேகமாகக் கார் ஓட்டி வருகிறாள். நான்கு ரோடுகள் சந்திக்கும் இடத்தைக் கடக்கும் போது வலது புறமிருந்து வந்த லாரியை கவனிக்காத பட்சத்தில் மின்னல் வேகத்தில் இரண்டும் மோதிக் கொண்டன. மெர்லின் கார் சுக்கல் சுக்கலாக நொறுங்கியது. காருக்கு வெளியே தூக்கி வீசப்பட்டாள். இரத்த வெள்ளத்தில் செத்துக் கிடக்கிறாள். அவள் எழுதிய டைரியும் அருகில் திறந்து கிடக்கிறது. சிறிது நேரத்திற்கெல்லாம் அக்கூட்டம் முடிந்து மக்கள் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். விபத்து நடந்த இடத்தை அடைந்ததும் சிலர் என்னவிபத்து என்று பார்ப்பதற்காக அங்கு வந்து பார்த்தபோது பிரபல நாட்டிய மங்கை மெர்லின் இரத்தவெள்ளத்தில் கோரமாகச் செத்து கிடக்கிறாள். பரிதாபத்துடன் பார்க்கும் போது அவள் பக்கத்தில் ஒரு டைரி திறந்து கிடக்கிறது. அதை எடுத்து திறந்திருந்த பகுதியைப் பார்க்கும் போது அதில் எழுதப்பட்ட வாசகம் Not today, not today, not today Tommorrow I will accept Jesus as my Saviour, இன்றல்ல, இன்றல்ல இன்றல்ல நாளை யேசுவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்கிறேன். என்று ஆனால் நாளையை சந்திப்பதற்கு முன்பு இன்றே அவள் இருளுக்குள் சென்று விட்டாள்.

சகோதரனே, சகோதரியே நாளை நடப்பதை அறியாதபடி, உலகம் தான் சதா என்று உன்மனம் போன வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறாயோ? உன் மரணம் எப்போது, கிறிஸ்துவின் வருகை எப்போது என்று அறியாது வாழுகின்றாயோ. அது நினையாத நேரத்தில் உன்னைத் தீண்டுமே. அவர் திருடனைப் போல் நினையாத நாழிகையில் வந்தால் நீ என்ன செய்யப் போகிறாய்? நாளை நாளை என்று காலம் கடத்திச் செல்லுகின்றாயே. பாவத்துக்கு மேல் பாவத்தைச் செய்கின்றாயே. இன்றாவது யேசுவை ஏற்றுக் கொள்வாயா? அவர் கிருபையைப் பெற்றுக் கொள்வாயா? நாளை நாளை என்று கடத்தினால் மெர்லினின் முடிவு ஏற்படலாம் அல்லவா? சிந்தி, ஜெபி, ஒப்புக்கொடு "இத்தனை பெரிதான இரட்சிப்பைக் குறித்துக் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எவ்வாறு தப்பித்துக் கொள்ளுவோம்?"

"எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம்,
பெலத்தின் மிகுதியால் என்பது வருஷமாயிருந்தாலும்,
அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே,
அது சீக்கிரமாய் கடந்து போகிறது. நாங்களும்
பறந்துபோகிறோம்." *சங்.90:10*



Whom Shall I send,
And Who Will Go For Us?
Then Said I,
Here Am I; Send Me

நியாயத் தீர்ப்பில் நீ தப்பமாட்டாய்!!

பிரேசில் நாட்டிலுள்ள போர்பா என்ற கிராமத்தில் செல்வந்தர் குடும்பத்தில் பிறந்த டாமினிகோ என்ற சீமான் வாழ்ந்து வந்தார். அவருக்கு பட்டணங்களில் அழகிய தோட்டங்களுடன் அமைந்த பல வீடுகளும் உண்டு. பல பெரிய கம்பெனிகளில் பங்குதாரராகவும் இருந்தார். அவர் வசித்து வந்த வீடு மலையடிவாரத்தில் அமைந்த எழில்மிக்க மாளிக்கையாகக் காணப்பட்டது. அவர் வாயிலிருந்து கட்டளை பிறக்க அதை நிறைவேற்ற எண்ணிறந்த வேலையாட்களுமுண்டு. அன்புடன் ஆதரிக்க மனைவியைத் தவிர மற்ற எந்த குறையுமின்றி இன்பமாக வாழ்ந்து வந்தார்.

தன்னிடம் வரும் ஏழை எளியவர்கட்கு இல்லை என்று கூறாது கொடுத்து வந்தார். வந்தவரெல்லாம் அவரை வாயாரப் புகழ்ந்து சென்றனர். இவ்வாறு சிறப்புடன் வாழ்ந்து வந்த நாட்களில் அவர் மாமிச இச்சைக்கு அடிமையாகி இரகசியமாக ஒரு பெண்ணுடன் தொடர்பு கொண்டு வாழ்ந்து வந்தார். பல ஆண்டுகளாக அவர் செய்து வந்த அந்தரங்க பாவம் ஒருநாள் வெளிப்பட்டது. எத்தனை நாட்களுக்குப் பாவத்தை மூடி மறைத்து வாழ முடியும். ஊர் அவரைப் பார்த்துச் சிரிக்கத் துவங்கியது. போற்றிப் புகழ்ந்த வாய்கள் இகழ்ந்து தூற்றத் துவங்கின தெருவில் நடமாடவே கால்கள் கூசின. யாரையும் ஏறிட்டுப் பார்க்க அவர் கண்கள் துணியவில்லை. செத்த நடை பிணத்தைப் போல் செயலற்றவரானார். கவலை அவரை ஆட்கொள்ளத் துவங்கியது. உடல்

படிப்படியாக உருக்குலையத் துவங்கியது. கடைசியில் இறைவனைத் தேடுவதை விட்டு விட்டு நிம்மதியைத் தேட பல வழிகளைக் கையாடினார். தீயவர்களின் ஆலோசனையையும் கேட்கத் துவங்கினார். கடைசியில் குடிக்க ஆரம்பித்தார். நாட்களும் உருண்டோடின. வைத்திருந்த செல்வமும் படிப்படியாக கரையத்துவங்கியது. இறுதியில் எல்லா செல்வங்களையும் இழந்து தங்க இடமின்றி, உண்ண உணவின்றி அலைந்தார். ஒருநாள் தன்னிடமிருந்த கொஞ்ச காசுக்கும் மது வாங்கி அருந்தி விட்டு கிராமத்தை விட்டு வெளியேறி பட்டணத்தை நோக்கி நடக்கலானார். மத்தியான வேளையாகியது. வெயில் கடுமையாகக் கொளுத்தியது. பசி ஒரு பக்கம் தாகம் மறுபக்கம்மிக சோர்வடைந்தவராக ரோட்டின் ஓரத்தில் தடுமாறி விழுந்தார். மயக்க முற்றவராய் கிடந்தார்.

இரவு பதினோரு மணி இருக்கும். செல்வந்தரர் ஒருவர் இந்த பாதையாக தன் காரை ஓட்டி வந்தார். கார் வெளிச்சத்தில் தூரத்தில் யாரோ ஒருவர் ரோட்டில் விழுந்து கிடப்பது போல தோன்றியது காரை மெதுவாக அவன் அருகில் கொண்டு சென்று நிறுத்தினார். மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு காரைவிட்டு இறங்கி அருகில் சென்று கார் வெளிச்சத்தில் அவனை உற்றுப்பாத்தார். அவருடைய மென்மையான கரத்தினால் அவனைத் தூக்கினார். ஏதோ வேதனையில் புலம்புகின்ற வார்த்தை அவன் வாயிலிருந்து வெளிப்பட்டது.

அவனிடமிருந்து வந்த மது வாடை அவர் மூக்கைத் துளைத்தது. கை கால்களிலும் முகத்திலும் முகம் குப்புற விழுந்ததினால் ஏற்பட்ட சிறு காயங்களிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. இரக்கம் அவர் இதயத்தைத் துளைக்கவே அவனை அப்படியே தன் மடியில் வைத்து அவன் காயங்களிலிருந்து கசிந்த இரத்தத்தைத் துடைத்தார். குடிப்பதற்குச் சற்று தண்ணீரும் கொடுத்து, அவனை அப்படியே தூக்கி அவர் காரின் பின் சீட்டில் படுக்க வைத்து அவர் குடும்ப டாக்டர் வீட்டை நோக்கி நேராகக் காரைச் செலுத்தினார். வீட்டின் முன் கார் நின்றது. மெதுவாகக் காரை விட்டு இறங்கி, முன்னிருந்த இரும்புக் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே சென்று, வராண்டாவின் ஓரத்தில் சுவரில் இருந்த பொத்தானை அழுத்தினார். வீட்டிலுள் மணி அடிக்கும் ஓசை கேட்டது. சில நிமிஷங்களுக்குள்ளாக யாரது? என்ன வேண்டும்? என்ற குரலுடன் டாக்டர் கதவைத் திறந்தார். "என்னங்க சார் நீங்களா? அதுவும் இந்த வேளையில்" என்று டாக்டர் கேட்டார். ஆமாம் சார் நானே தான். கிளப்புக்குப் போய் விட்டு வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருக்கும் போது தெருவில் ஒரு மனிதன் காயங்களுடன் குடிகோதையில் விழுந்து கிடந்தான். பாவம் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவன் போல் காணப்படுகிறான். ஆகையால் அவனை காரில் போட்டு உங்களிடம் கொண்டே வந்தேன். அவனை நீங்கள் எப்படியும் காப்பாற்ற வேண்டும்

எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை நான் கொடுத்து விடுகிறேன். பின் நான் வந்து பார்க்கிறேன் என்று கூறினார் பின் அவனை மெதுவாகக் காரை விட்டு இறக்கி டிஸ்பென்சரிக்கு கொண்டு சென்று படுக்கையில் கிடத்தினார்கள். டாக்டர் அவனை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள். அதற்கு முன் பணமாக இந்த 100 ரூபாவை வைத்துக் கொள்ளுங்கள் என்று தன் சட்டைப் பையிலிருந்து பர்சை எடுத்து அதிலிருந்து ஒரு 100 ரூபாய் நோட்டை எடுத்து டாக்டர் கையில் கொடுத்து விட்டு காரை வீட்டை நோக்கி வேகமாகச் செலுத்தினார்.

டாக்டரும் தீவிர சிகிச்சை கொடுக்கத் துவங்கினார். படிப்படியாக உடல் நலம் பெறத் துவங்கியது. நல்ல உணவுகளும் கொடுக்கப்பட்டது. சில நாட்களுக்குள் பூரண சுகம் பெற்றார். ஒரு நாள் அவரைக் காப்பாற்றிய செல்வந்தர் அவர் சுகம் பெற்றுத் தேறி வருவதை அறிந்து அவரைச் சந்திக்கும்படி வந்தார்.

செல்வந்தரைக் கண்டவுடன் டாமினிகோ "ஐயோ அனாதையாக ரோட்டில் விழுந்து கிடந்த என்னைத் தங்களின் புனித கையால் தூக்கி, என் காயங்களைக் கட்டி என்னை ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்து சுகப்படுத்தினீர்கள். இதுவரை நீங்கள் செய்த எல்லா உதவிகளுக்காகவும் உங்களுக்கு நன்றி கூறுகிறேன். இப்போது நான் பூரண சுகத்துடன் இருக்கிறேன். இனிமேலும் நான் உங்களுக்கு பாரமாக இருக்க விருமபவில்லை. என்னை தயவுசெய்து அனுப்பி விடுங்கள்" என்றார் அவர் கூறியதைக் கேட்ட செல்வந்தர் எனக்கு ஒன்றும் நீங்கள் பாரமாக இல்லை. ஒரு மனிதன் செய்யும் செயலைதான் நானும் செய்திருக்கிறேன். நீங்கள் ஏன் இந்த நிலைக்கு வந்தீர்கள் என்பதைக் கூற முடியுமா? என்று கேட்டார்.

டாமினிகோ மிக மன வருத்தத்துடன் தான் செல்வமாக வாழ்ந்ததையும், மாமிச இச்சைக்கு இடம் கொடுத்ததின் பயனாகத் தன் மன அமைதியை இழந்து கவலையைப் போக்கத் தீயவரின் ஆலோசனைப்படி குடித்து இந்த இழிவான நிலைக்கு வந்ததையும் கூறினார். இவ்வார்த்தைகளைக் கேட்ட செல்வந்தரு அவர் மீது மிகுந்த அன்பும், இரக்கமும் கொண்டு, "கடந்த காலத்தை நினைத்து கவலைப்படாதீர்கள். இனி நடக்க வேண்டியதைச் சிந்திப்போம். நான் ஒரு சிறந்த தொகை தருகிறேன். அதை வைத்து நீங்கள் வியாபாரம் செய்து மீண்டும் இழந்த செல்வத்தைப் பெற்று நல்வாழ்வு வாழ பிரயாசப்படுங்கள். கடவுளும் துணை செய்வார்" என்றார். டாமினிக்கோ அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை, அவருக்கு நன்றி கூறி கிடைத்த பணத்தை எடுத்துக் கொண்டு போர்போ பட்டணத்தின் வட திசையிலுள்ள மற்றொரு பகுதியில் குடியேறி வியாபாரம் செய்யத் துவங்கினார். இறைவனுடைய அருள் இருந்தபடியால் வெகு விரைவில்

திரண்ட செல்வத்தை ஈட்டினார், செல்வச் செருக்கினால் புத்தி தடுமாறத் துவங்கியது. வேருடன் பிடுங்காத, சுட்டெரிக்கப்படாத மாமிச இச்சை படிப் படியாக தலை தூக்க ஆரம்பித்தது. குறுகிய காலத்தில் திரண்ட செல்வமும், புகழும் மக்களின் நன் மதிப்பையும் பெற்ற டாமினிக்கோ, எத்தனை நாட்கள் பாவத்தை மறைத்து வாழ முடியும். ஊரில் பெரிய மனிதன், செல்வந்தன், வள்ளல் என்ற போர்வையால் எத்தனை நாட்கள் தன் பாவத்தை மறைத்து வாழ முடியும் ஒரு நாள் அவனுடைய பாவம் மீண்டும் வெளிப்பட்டது. கையும் மெய்யுமாகப் பிடிபட்ட டாமினிக்கோவால் மானமுடன் சமுதாயத்தில் தலை நிமிர்ந்து நடக்க முடியவில்லை. பல வகையிலும் பரிகாரம் தேட முயன்றும் முடியாமல் கடைசியில் பழைய நிலைக்கு வந்தார். மதுதான் மனத்தின் கவலைகளை மாற்ற முடியும் என குடிக்கத் துவங்கினார். காலம் உருண்டோடியது. செல்வமும் கரைந்தது. எல்லாவற்றையும் இழந்து நடுத் தெருவில் நிற்கலானார். டோமினிக்கோ குடிப் பழக்கம் அந்த வெறியிலிருந்து மீள முடியாமல் குடிக்க பணத்திற்காக ஒரு நாள் இரவு ஒரு அதிகாரியின் வீட்டில் திருட முயன்றார். அதனைக் கண்ணுற்ற காவலாளி அவனைப் பிடிக்க முயன்ற போது அவனைக் குத்திக் கொலை செய்தார். கொலை செய்து விட்டு தப்ப முயன்ற போது பிடிபட்டான். சிறையில் அடைக்கப்பட்டான். நீதி மன்றத்திலும் கொண்டு போய் நிறுத்தப்பட்டான்.

சரியாக காலை 11 மணிக்கு நீதிபதியின் ஆசனத்தில் வயது சென்ற முதியவர் வந்து அமர்ந்தார். டாமினிக்கோவின் முகத்தைச் சற்று வியப்புடன் உற்றுக் கவனித்தார். கண் கலங்கியது. டாமினிக்கோ யாருமற்ற அனாதையாக இருந்ததால் அரசாங்கமே ஒரு வக்கீலை அவனுக்காக வழக்காட நியமித்தது. வக்கீல்கள் வழக்காடத் துவங்கினர். நீதிபதி பீடத்தில் அமர்ந்திருப்பவரை எங்கேயோ பார்த்த எண்ணம் அவன் இதயத்தில் ஓடிக் கொண்டிருந்தன. நாட்கள் கடந்தன. தீர்ப்புக் கூற வேண்டிய நாளும் வந்தது.

டாமினிகோ நியாயாதிபதியைக் கடைசி நாளன்று சற்று உன்னிப்பாகக் கவனித்தான். தன் கடந்த கால எண்ண அலைகளைச் சற்று ஓட விட்டான். இறுதியில் ஒருவாறு அவர் யார் என்பதைப் புரிந்து கொண்டதும் அவன் இருதயத்தில் ஒரு நம்பிக்கை பிறந்தது. உடலில் ஒரு புதிய வலிமை வந்தது போல தோன்றியது கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பியது. அன்றொரு நாள் கீழே அனாதையாக ரோட்டில் மயக்கமாகக் கிடந்த போது தன்னைத் தூக்கி ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று சுகப்படுத்தி வாழ வழிகாட்டி பணமும் கொடுத்து அனுப்பிய அதே கருணை உள்ளம் படைத்தவர்தான் இங்கு நீதிபதியாக அமர்ந்திருக்கிறார். நிச்சயம் இரங்குவார், என் குற்றத்தை மன்னிப்பார்,

எனக்கு விடுதலை தருவார் என்று இமை தட்டாது கண்களில் கண்ணீர்மல்க விரித்தகரங்களுடன் நீதிபதியைப் பார்த்துக் கெஞ்சுவது போல் நின்றான். தீர்ப்புக் கூற வேண்டிய நேரமும் வந்தது. நீதிபதி தீர்ப்புக்கூற எழுந்தார். கோர்ட்டில் எங்கும் நிசப்தம் நிலவியது. எல்லாரும் நீதிபதியின் வாயைப் பார்த்துக் கொண்டிருந்தனர். நீதிபதி வாய் திறந்தார். இவன் செய்த கொலை குற்றத்திற்கு சட்டப்படி இவனுக்கு மரண தண்டனை விதிக்கிறேன் என்று கூறி முடித்தார். இவ்வார்த்தையைக் கேட்ட டோனிமின்கோ, ஐயா நீதிபதி யாரே என் குற்றங்களை மன்னியுங்கள். நீங்களா எனக்கு மரண தண்டனை விதிக்கிறீர்கள்? நான் யாரென்று தெரியவில்லையா? நான் தான் டாமினிக்கோ. அன்று கீழேவிழுந்து கடந்தபோது என்னைத் தூக்கி, என் காயங்களைக் கட்டி, என்னை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று, என்னைச் சுகப்படுத்தி, பணம் கொடுத்து வாழ வழி காட்டிய நீங்களா இன்று மரண தண்டனை எனக்கு விதிக்கிறீர்கள்? ஐயா எனக்கு இரங்குங்கள். இந்த ஒருவிசை மாத்திரம் இரங்குங்கள் என்று கதறினான். அதற்கு நீதிபதி நண்பனே அன்று நீ தெருவில் விழுந்து கிடந்த போது உன் நண்பனாக வந்தேன், உன்னைத் தூக்கினேன், உன் காயங்களைக் கட்டினேன். உன்னை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றேன். பணம் கொடுத்தேன். வாழ வழியும் காட்டினேன். நீ வாழ்ந்தாயா, இல்லையே, இன்று நான் நீதிபதியாக வந்திருக்கிறேன். இங்கு இரக்கம், பாசம், உறவு இவைகளுக்கு இடமில்லை, நீதி நீதிதான். நீ செய்த குற்றத்திற்கு உனக்கு மரண தண்டனை தான். இவனை இழுத்துச் செல்லுங்கள், என்றார்.

நண்பனே! இன்று தெய்வம் பாவத்திலும் துன்மார்க்கத்திலும் வாழும் உனக்குத் தாயாக, தந்தையாக, நண்பனாக ஆலோசகராக, ஆசிரியராக, போதகனாக உனக்குத் காணப்படுகிறார் உதவுகிறார். இவைகளுக்கு நீ இணங்காவிட்டால், செவி கொடுக்கா விட்டால் நாளை அவர் நியாயாதிபதியாக வரும் போது உன் கிரியைகள் உன்னை இரட்சிக்காது. அன்று அக்கினியும் கந்தகமும் எரியும் அக்கினி கடல் தான் உனக்குக் கிடைக்கும்.

“தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான் அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்.”

காலம் தாழ்த்தினால் மரணமே!!

நியூசிலாந்து தேசத்தின் கிழக்குக்கரையிலுள்ள ஹட் என்ற ஊரில் லிசி என்ற ஏழை மாது வசித்து வந்தாள். ஒவ்வொரு நாளும் கோதுமை வயலுக்குச் சென்று கடினமாக உழைத்து அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு மனநிறைவுடன் அன்றாடக வாழ்க்கையை நடத்தி வந்தாள். டேவிட் என்ற 18 வயது நிரம்பிய மகன் ஒருவன் இவளுக்கு இருந்தான். தந்தையில்லா காரணத்தினால் தாய் மகனை மிக அன்புடன் வளர்த்து வந்தாள். ஆனால் டேவிட் தாயின் இளகிய உள்ளத்தைப் பயன்படுத்தி குடும்பத்தின் நிலை வருமானம் தெரியாது மனம் போன போக்கில் வாழ முற்பட்டான். பணக்கார வாலிபர்களுடன் சேர்ந்து கொண்டு குடிப்பதும், சூதாடுவதும், சினிமாவுக்குச்செல்லுவதும், இன்னும் பல கீழ்த்தரமான செயல்களையும் செய்து வரலானான். இச்செயல்களைக் கண்ட லிசி மனம் உடைந்தாள். தெய்வ சந்நிதானத்தில் கண்ணீரோடு தேவனை நோக்கி மன்றாடினாள். மகனையும் அழைத்து அன்புடன் பல முறை கண்டித்தாள், "மகனே உன் தந்தை உன்னையும் என்னையும் அனாதையாய் விட்டு விட்டுச் சென்று விட்டார். நீ இரவில் இப்படி 10,11 மணிக்கு வந்துகதவைத்தட்டினால் மற்றவர்கள் என்னைக் கேவலமாக பேசமாட்டார்களா? குடும்பத்தின் வருமானத்தை அறியாதபடி இப்படி வாழ நினைக்கலாமா? உன் வருங்கால வாழ்க்கையைப் பாழாக்கலாமா? வேண்டாம் மகனே" என்று கண்ணீரோடு கதறினாள், ஆனால் டேவிட் சற்றும் செவிசாய்க்காமல் வாழ்ந்து வந்தான். துன்மார்க்கம் அதிகரித்துக் கொண்டே போனது. தன்னுடைய மனம் போன உல்லாச வாழ்க்கைக்கு போதிய பணம் கிடைக்காத காரணத்தினால் திருடவும், ஆரம்பித்தான். திருட்டுத் தொழிலில் ஈடுபட்டான்,

கொலைகாரனாகவும் மாறி விட்டான். சில ஆண்டுகள் கடந்தன. டேவிட் எப்போதாவதுதான் தன் வீட்டிற்கு வருவான், மற்றபடி அவனுடன் சேர்ந்த தீய நண்பர்களுடன் தங்கி விடுவான். லிசியின் உள்ளம் ஆறா துயரத்துக்குள்ளாகியது. தெய்வ சமூகத்தில் தொடர்ந்து கண்ணீர் சிந்தி மகனுக்காக ஜெபித்தாள்.

சோகமே உருவெடுத்தவளாக ஒருநாள் லிசி தன் படுக்கையில் தூங்கிக் கொண்டிருக்கும்போது சிலர் கதவை விரைவாக படபடவென்று தட்டும் சத்தம் கேட்டது. கண்விழித்துக் கொண்டு லிசி நடுக்கத்தோடு கதவைத்திறந்தாள். காலை இரண்டு மணி இருக்கும் பக்கத்துத் தெருவைச் சேர்ந்த சிலர் நிற்பதைக் கண்டாள். "என்ன விஷயம் இப்படி கதவைத் தட்டுகிறீர்கள்"? என்றாள் "அம்மா, அம்மா உங்கள் மகன் டேவிட் மிராசுதாரின் வீட்டில் திருடியிருக்கிறான், திருடிவிட்டு வெளியே போகும் போது காவல்காரன் பார்த்து அவனைப் பிடித்து விட்டான் தப்புவதற்கு வழியில்லாமல் டேவிட் அவனைக்கொலை செய்து விட்டான். மீண்டும் தப்புவதற்குள் அவனைப் பிடித்து விட்டார்கள். இப்போது அவன் சிறையிலிருக்கிறான்" என்றனர். இவ்வார்த்தைகளைக் கேட்டதும் கண்களில் லிசிக்கு கண்ணீர் ததும்பியது, தலை சுற்றியது, கை கால்களெல்லாம் நடுங்க ஆரம்பித்தது, சற்று நேரம் லிசி பிரமைப் பிடித்தவள் போல நின்றாள். பொழுது விடிந்ததும் லிசி அங்குமிங்குமாக ஓடிச் சென்று பல பெரிய மனதர்களைச் சந்தித்து தன் மகனுடைய விடுதலைக்காகக் கெஞ்சினாள். பலன் ஏதும் ஏற்படவில்லை. இறுதியில் அரசன் தான் தீர்ப்புக் கூறுவான் என்று அறிந்தாள். அரசனை சந்தித்து தன மகனுக்காக மன்றாடுவது என முடிவு செய்தாள்.

மறுநாள் காலை நீதிமன்றத்தில் அரசன் முன் டேவிட் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான். பல ஆண்டுகளாக அவன் செய்த குற்றங்கள் எல்லாம் ஒவ்வொன்றாகக் கூறப்பட்டது. இறுதியில் டேவிட் செய்த கொலைக் குற்றமும் நிரூபிக்கப்பட்டது. வழக்கை விசாரித்த அரசன் டேவிட் செய்த கொலைக் குற்றத்திற்காக மரண தண்டனை விதித்தான். மரண தண்டனை தன் மகனுக்கு விதிக்கப்பட்டது என்பதை கேள்விப்பட்ட லிசி நெருப்பில் விழுந்த புழு போல துடித்தாள். அரசனிடம் ஓடோடி வந்தாள், அரசனையும் சந்தித்தாள். தன் ஒரே மகனுக்காக மன்றாடத் தொடங்கினாள். மகாராஜாவே இந்த ஏழைக்கு நீங்கள் இரங்கத் தான் வேண்டும் என் மகன் டேவிட் செய்ய குற்றங்களை மன்னிக்கத்தான் வேண்டும். நான் யாருகாவாவது மற்ற அனாதை. என் மகனை நம்பித்தான் வாழ்கிறேன் அவனை இழந்து என்னால் வாழ முடியாது. இந்த அனாதைக்காவாது பொறுத்தருள வேண்டும் எனக்கெஞ்சினாள். அதற்கு அரசன், இதுவரை உன் மகன் செய்த குற்றங்களைப் பொறுத்துக் கொண்டோம். ஆனால் இப்போது அவன்

செய்த கொலைக் குற்றத்திற்கு மன்னிப்பே கிடையாது. மரண தண்டனை தான் என்றான். உடனே லிசி, "ஐயா என் மகனுக்கு நீங்கள் இந்த ஒரு முறை மன்னிப்புத் தந்துதான் ஆக வேண்டும். மன்னிக்காத பட்சத்தில் என்னையும் அவனுடன் சேர்த்துக் கொன்று விடுங்கள், என் மகனுக்கு விடுதலை தரும் வரை நான் இவ்விடத்தை விட்டுப் போக மாட்டேன் என்று கால்களைப் பற்றிக் கொண்டு கதறினாள்.

லிசியின் அழுகையும், கண்ணீரும் புலம்பலும் அரசனின் மனதை அசைத்தது. ஒருவாறு அரசன் தன் மனதைமாற்றி லிசிக்கு உதவினார். போர்ச் சேவகனை அழைத்து விடுதலை பத்திரத்தையும் எழுதினார். நாளை மாலை சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன் அவன் தலை துண்டிக்கப்படவேண்டும் என்று டேவிட்டுக்கு தீர்ப்பு எழுதியிருந்தேன். இப்போது அதை மாற்றியுள்ளேன். அவனை விடுதலை செய்யும்படி, இதைக் கொண்டுபோய் கொலைக்களத்தில் "நாளை மாலை 6 மணிக்குமுன் கொடுத்து டேவிட்டை விடுதலை செய்துவிடு என்று கூறி அனுப்பினார்.

கொலைக்களம் வெகுதூரம் இருந்தபடியினால் போர்ச் சேவகன் காலையிலே புறப்பட்டான். காலை ஒன்பது மணிக்கு பட்டணத்தை அடைந்தான். அங்கு ஒரு சினிமாக்கொட்டகை; அங்கு ஏராளமான மக்கள் கூட்டம் இவன் அக்கூட்டத்தின் ஊடே நின்று அங்கு சுவரில் பொருத்தப்பட்ட சில படங்களைப் பார்த்து, ரசித்துக் கொண்டிருந்தான். கூட்டம் சற்று கலைந்து சென்றதும் மீண்டும் தனது பிரயாணத்தைத் துவங்கினான். சற்று தூரம் சென்றபின் மற்றொரு கூட்டத்தையும் கண்டான். குடித்து, வெறித்து கும்மாளம் அடித்துக் கொண்டிருந்த அக்கூட்டத்தைச் சற்று நேரம் வேடிக்கைப் பார்த்தான். சற்று நேரத்திற்குப்பின் மீண்டும் தனது பிரயாணத்தைத் தொடர்ந்தான். மாலை மூன்று மணி அளவில் சாலையின் ஓரத்தில் ஒருவன் பாம்புகளை வைத்து விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தான். அவனைச் சூழ்ந்து மக்கள் டிவக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆசை யாரை விட்டது என்பதற்கிணங்க அவனும் அவ்விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்தனர். சிறிது காலத்திற்குப்பின் மீண்டும் தன் பயணத்தைத் தொடங்கினான். செல்லும் வழியில் உள்ள ஒரு கிராமத்தில் பொம்மலாட்டம் நடந்து கொண்டிருந்தது. மணியைப் பார்த்தால், நான்கு மணி முப்பது நிமிஷம். இன்னும் ஒரு மணி நேரம்தான். ஆகையால் தன் மனதில் துணிகரமான எண்ணம் கொண்டு இன்னும் சற்று நேரம் பார்த்துவிட்டு புறப்பட்டுச் சென்று விடலாம் என்று பொம்மலாடத்தின் மீது தன் கண்களைச் செலுத்தினான். மிக அருமையான காட்சி அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. தன் காரியத்தை மறந்தவனாக நின்றுவிட்டான். திடீரென்று ஏற்பட்ட ஒரு அவசர உணர்ச்சியினால் மணியைப் பார்த்தான். மணி சரியாக ஐந்து, ஆனால் 6 மணிக்குத் தலை

துண்டிக்கப்பட்டுவிடும், எப்படியும் போய்ச் சேர்ந்த விடலாம் என்ற எண்ணத்தில் வேகமாக ஓடினான். இறுதியில் கொலைக்களத்தை அடைந்தான். நிறுத்து! நிறுத்து! அரசன் விடுதலை பத்திரம் கொடுத்திருக்கிறார். நிறுத்து! என்பதற்குள் நேரம் 6 மணிக்கும் தாண்டிவிட்டபடியால் டேவிட் தலை துண்டிக்கப்பட்டு விட்டது.

டேவிட் தலை துண்டிக்கப்பட்டத்தைக் கேள்விப்பட்டாள் விசி. துடித்தாள், கதறினாள், அரசனிடம் ஓடினாள். அவன் பாதத்தில் விழுந்து கதறினாள்; அரசே என் மகனுக்கு இரங்குவது போல் இரங்கினீரே, விடுதலையளிப்பதைப் போல் அளித்தீரே. இப்போது என் மகன் தலை துண்டிக்கப்பட்டு விட்டதே! இது தான் நேர்மையா? நீதியா? என்று புலம்பினாள், ஒரு கணம் அரசன் ஒன்றும் அறியாதவனாக திகைத்து நின்றான். பின்ஒருவாறு தன்னை சரி செய்து கொண்டு என்ன நடந்தது என்று விசாரித்தான். அவளுடைய மகன் டேவிட்டின் தலை துண்டிக்கப்பட்டதை அறிந்தான். கண்ணீரோடு பிதற்றிக் கொண்டிருந்த தாயைப் பார்த்து "அம்மா நான் உங்கள் முன்பு உங்கள் மகனுக்கு விடுதலையளிக்கும்படி விடுதலைப் பத்திரத்தை எழுதி போர்ச்சேவகனிடம் கொடுத்தனுப்பவில்லையா? அதன்பின் என்ன நடந்தது என்று எனக்கு ஒன்றுமே தெரியாது". என்று கூறினான். "எங்கே அந்த போர்ச் சேவகனை அழைத்து வா" என்றான் அரசன். போர்ச்சேவகன் அழைத்து வரப்பட்டான். நடுக்கமுடன் கண்ணீர் மல்க அரசன் முன்பு வந்து நின்றான். அரசன் ஆக்ரோஷத்துடன் அவனைப் பார்த்து டேவிட்டை விடுதலைப் பண்ண நேற்று காலை உன்னிடம் விடுதலைப் பத்திரத்தைக் கொடுத்து மாலை ஆறு மணிக்குள் கொலைக்களம் சென்று இதைக்கொடுத்து அவனை விடுதலை செய் என்று சொல்லி அனுப்பினேனே. இப்போது அவன் தலை துண்டிக்கப்பட்டு விட்டது என்று கேள்விப்படுகிறேனே! என்ன நடந்தது? என்று கேட்டான். போர்ச்சேவகன் நடுங்கியவாறே திக்கி திக்கி ஐயா, ஐயா நான் அந்த விடுதலைப் பத்திரத்தைக் கொடுக்க கொலைக்களம் நோக்கிச் சென்றேன், ஆனால் போகும் வழியில் ஒரு சினிமா கொட்டகையின் முன் மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். நானும் . . . நானும் சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தேன் பின் புறப்பட்டுப் போனேன். சற்று தூரத்தில் ஒரு குடிகார விடுதியில் சிலர் குடித்து. வெறித்து ஆடிக்கொண்டிருந்தனர். நானும் சற்று . . . சற்று நேரம் அங்கு பொழுது போக்கி விட்டேன். மீண்டும் அங்கிருந்து பிரயாணம் பண்ணிக் கொண்டிருக்கும் போது ஒரு இடத்தில் பொம்மலாட்டம் நடந்து கொண்டிருந்தது. நானும் . . . கொஞ்ச நேரம் பார்க்கலாம், பிரயாண தூரம் இன்னும் சில மைல்கள்தான் இருக்கிறது. இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது. பிரயாணத்திற்கு அரை மணி நேரம் போதும் சற்று நேரம் பார்த்துவிட்டுப் போய் அவரை விடுதலையாக்கி விடலாம் என்று

எண்ணிக் கொண்டு பொம்மலாட்டம் பார்த்துக் கொண்டிருந்தேன். நேரம் போனதே தெரியவில்லை. என் மனம் அந்த காட்சியில் அப்படியே லயித்துப் போய்விட்டது. பின் நேரத்தைப் பார்த்தேன். அரைமணி நேரமே இருந்தது. போய்ச் சேர்ந்துவிடலாம் என்று எண்ணி கொலைக் களத்தையும் அடைந்து விட்டேன். நிறுத்து! நிறுத்து! அரசன் விடுதலைப் பத்திரத்தைக் கொடுத்திருக்கிறார் என்று சொல்வதற்குள் அவன் தலை துண்டிக்கப்பட்டு விட்டது, என்னை மன்னியுங்கள் அரசே என்று கெஞ்சினான்.

அப்போது அந்த அரசன் அந்த ஏழையைப் பார்த்து இவ்வாறு கூறினான். "அம்மா நான் உன் பரிதாப நிலை கண்டு, உன் மகனை விடுதலையாக்க நேற்றே விடுதலைப் பத்திரம் கொடுத்து அனுப்பினேன். ஆனால் அவனோ சினிமாக் கொட்டகையிலும், குடிகார விடுதியிலும், பொம்மலாட்டத்திலும் காலத்தை விரயம் செய்து சேர்க்க வேண்டிய விடுதலைப் பத்திரத்தை சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்க்க வேண்டிய நேரத்தில் சேர்க்கத்தவறி விட்டான். ஆகையால் உன் மகன் துண்டிக்கப்பட்டுப் போனான். அவன் இரத்தப் பழி அவன்மீது சுமருமே தவிர என்மீது சுமராது" என்று கூறினார்.

அன்புள்ள சகோதரனே, சகோதரியே, இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் நம் அருமை இரட்சகர் இயேசு கிறிஸ்து பரமேறிச் செல்லும் பொழுது வேதப் புத்தகத்தை நம் கையில் கொடுத்து உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கி, பாவத்திலும் சாபத்திலும், நோயிலும், கவலையிலும், வேதனையிலும், கண்ணீரிலும், நிந்தையிலும் மரணத்திலும் தவித்துத் கொண்டிருக்கும் மக்களுக்கு என் ஆறுதலின் செய்தியைச் சொல்லு, விடுதலை செய் என்று கூறிவிட்டுச் சென்றார். ஆனால் நாமோ உலக ஆசாபாசங்களுக்கும் ஆடம்பரங்களுக்கும் அடிமையாகி நம் வாழ்வை கழித்துக் கொண்டிருப்போமானால், அழிந்து போகும் ஆத்துமாக்களின் இரத்தப்பழி நம்மீது சுமரும். ஞானமாய் நடந்து காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்.

ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறவன்
ஞானமுள்ள மனுஷன்.

LET YOUR LIGHT SHINE AND GOD WILL
PUT IT WHERE IT CAN BE SEEN !

இதல்லவோ ஆத்தும பாரம்!

சிறுவயதில்

அமெரிக்கா ஐக்கிய நாட்டிலுள்ள நியூயார்க் பட்டிணத்தில் ஜனத் தொகை நிறைந்த ஒரு பகுதியில் இயேசு கிறிஸ்து சிலுவையில் அடிக்கப்பட்டு இரத்தம் சிந்திக் கொண்டிருக்கிறது போன்ற தத்துருமான சிலைவைக்கப் பட்டிருந்தது. அந்த வழியாகச் செல்லுகிறவர்கள் அந்த சிலை அருகே வந்ததும் எப்படியாயினும் சில நிமிஷங்கள் நின்று அதைப் பார்த்து விட்டுச் செர்வார்கள். பார்ப்பவர்களின் உள்ளம் உருகாமல் இருப்பதில்லை.

ஒரு நாள் ஒரு கிராமத்தை சேர்ந்த டான்டி என்ற வயோதிகர் அந்தப் பாதையாக வந்தார். அந்த சிலை இருந்த இடத்தின் அருகே வந்தபோது அங்கு கூட்டமாக மக்கள் நின்று அந்தச்சிலையை பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார். இவரும் சற்று அருகில் சென்று அந்த சிலுவையையும், அதில் அறையப்பட்டு இரத்தம் சொட்டச், சொட்ட, தொங்கிக் கொண்டிருக்கும் இயேசுவை அப்படியே அசையாமல் நின்று சற்று நேரம் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர் இமை கொட்டாமல் சோக முகத்தோடு இந்த சிலுவை நாதரைப் பார்த்துக் கொண்டிருப்பதை கவனித்துக் கொண்டிருந்த பிரான்ஸிஸ் என்ற 12 வயது பையன் அந்த வயோதிகரிடத்தில் வந்து, ஐயா நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் இவர் யார் தெரியுமா? இவர் தான் இயேசு கிறிஸ்து இவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்த உலகத்தில் "மனிதனாக யூதேயாவிலுள்ள பெத்லகேமில் யோசேப்பு, மரியாளுக்கு பரிசுத்த ஆவியானவர் மூலம் மகனாகப் பிறந்தார். முப்பது ஆண்டுகள் தாய் தந்தைக்கும், அரசாங்க சட்ட, திட்டங்களுக்கும் கீழ்படிந்து வாழ்ந்தார், மூன்றரை ஆண்டுகள் இந்த உலகத்தில் நன்மை செய்கிறவராய் சுற்றித் திரிந்தார், சகல வியாதியஸ்தர்களையும் சுகமாக்கினார் சகல வித பிசாசுகளின் பிடியிலிருந்து மனிதர்களை விடுதலையாக்கினார், பாவத்திலும், சாபத்திலும் வாழ்ந்த மக்களை விடுதலையாக்கினார்,

உடைந்த உள்ளங்களை ஆறுதல்படுத்தினார், தேற்றினார், நம்பிக்கை இழந்த மக்களுக்கு நம்பிக்கையளித்தார், பரலோகத்தைக்குறித்தும், நரகத்தைக் குறித்தும் வல்லமையோடு பிரசிங்கித்தார்.

இந்த உலகத்திலுள்ள மக்கள் அவர் மீது பொய் குற்றங்களைச் சுமத்தி அவரை இப்படி சிலுவையில் அறைந்தார்கள். அவர் மரித்தார் என்று உருக்கமாக சொல்லி முடித்ததும் அந்த பெரியவர் கண்களில் இருந்த கண்ணீர் சொட்டு, சொட்டு என்று விழுந்தது. அவர் அந்த இடத்தை விட்டு நடக்க ஆரம்பித்தார்.

சற்று தூரம் துயரத்தோடு, கண்ணீர் நிறைந்த கண்களோடு சென்று கொண்டிருப்பதைக் கண்ட பிரான்சிஸ் அவர் பக்கமாக ஓடிச் சென்று அவரைப் பார்த்து ஐயா என்று கூப்பிட்டான். அவர் அவனைத் திரும்பிப்பார்த்து என்ன தம்பி என்று கேட்டார். ஐயா, அந்த சிலுவையில் அறையப்பட்டு, கொலை செய்யப்பட்ட இயேசு அவர் சொன்ன வார்த்தையின்படியே மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். நாற்பது நாட்கள் அவர் உயிர்த்தெழுந்ததை பல திருஷ்டாந்தங்களின் மூலம் தம்மை வெளிப்படுத்தி காட்டிவிட்டு பரலோகத்துக்குச் சென்று நம் ஒவ்வொருவரின் நல்வாழ்வுக்காக பிதாவின் வலது பாரிசத்திலிருந்து பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். நமக்காக பரலோக இராஜ்யத்தை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார், அவர் இருக்கும் இந்த பரலோக இராஜ்யத்துக்கு நம்மை அழைத்துச் செல்ல சீக்கிரம் வரப்போகிறார். இந்த உலகத்தையும் நியாயத்தீர்க்கப் போகிறார். இந்த அன்புள்ள இயேசுக்கிறிஸ்து இன்றும் உயிர் உள்ள தெய்வமாக நம் மத்தியில் ஜீவிக்கிறார், இவர் உங்களையும் நேசிக்கிறார், உங்கள் பாவங்களை இந்த இயேசு இரட்சகர் மன்னிப்பார் என்று உண்மையாய் நம்பி உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, அவரிடம் சொல்லி மன்னிப்பு கேட்டால் அவர் உங்கள் சகல பாவங்களையும் மன்னிப்பார், உங்களை ஆசீர்வதிப்பார் என்று சொல்லி முடித்ததும், அவர் முகத்தில் ஒரு சந்தோஷம் தோன்றியது, இயேசுவை தன் இதய தெய்வமாக அன்று ஏற்றுக் கொண்டார். இரட்சிக்கபட்டார், அவருடைய பிற்கால வாழ்கை மிக ஆசீர்வாதமாகக் காணப்பட்டது. உனக்கு இந்த சிறுவனுக்கிருந்த ஆத்தும பாரம் உண்டா? இனியாவது ஆத்துமாக்களை ஆதாயம் படுத்துவாயா?

வயோதிகத்தில்

ஆஸ்திரேலிய நாட்டில் நியூகாசில் என்ற அழகிய பட்டிணத்தில் ராய் என்ற எழுபது வயது பெண் தனிமையில் வசித்து வந்தாள். அவளுக்கு உற்றார் உறவினர் யாருமில்லை. இவள் ஒரு நாள் அந்த பட்டிணத்திலுள்ள ஒரு மாபெறும் மஹாலில் நடைபெற்ற மிஷனெரி எழுப்புதல் கூட்டத்திற்குச் சென்றாள். அங்கு அநேக மிஷனெரிகளின் வாழ்க்கையைப் பற்றியும், அவர்கள் ஊழியத்தின் பாதையில் பட்ட இன்னல்கள், இழப்புகள், அடைந்த துன்பங்களைப்பற்றியும் கேட்டாள். அவளுடைய உள்ளம் உடைந்தது. ஆண்டவர் பணிக்கென்று தன்னை அற்பணித்தாள். எஞ்சிய காலமெல்லாம் ஊழியம் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தோடு வீட்டிற்கு வந்தாள். எப்படி ஊழியம் செய்வது? எங்கு சென்று ஊழியம் செய்வது, வயதும் ஆகி விட்டதே என்று சிந்திக்க ஆரம்பித்தாள். இறுதியில் தன்னுடைய ஆலய குருவானவரிடம் சென்று ஆலோசனை கேட்கலாம் என்று குருவானவரிடம் சென்றாள்.

குருவானவர் பெஸ்லியும் மிக அன்புடன் வரவேற்று உபசரித்தார். வந்ததின் நோக்கம் என்ன என்று கேட்டார். அந்த அம்மா மிகுந்த பாரத்தோடு, "ஐயா என் உயிர் உள்ளவரை தேவனுக்கென்று ஊழியம் செய்ய தீர்மானித்திருக்கிறேன். இவ்வளவு வயதுக்குப்பின் எப்படி ஊழியம் செய்வது என்று தெரியவில்லை. ஐயா, நீங்கள் தயவு செய்து ஜெபித்து ஆலோசனை சொல்லுங்கள் என்று சொன்னாள்.

குருவானவருக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. வயதான காலத்தில் இவர்கள் எங்கு சென்று எவ்வாறு ஊழியம் செய்ய முடியும் என்று சிந்தித்தார். இறுதியில் அந்த அம்மாவைப் பார்த்து அம்மா நீங்கள் வீட்டிற்குச் சென்று வேதத்தில் கூறியபடி கதைப்பூட்டிக் கொண்டு தேவனை நோக்கி ஜெபியுங்கள். தேவன் உங்கள் ஊழியத்தைக் குறித்து திட்டமாகத், தெளிவாகப் பேசுவார் என்று சொல்லி அனுப்பி வைத்தார். வீட்டிற்குச் சென்று தேவனை நோக்கி, சில நாட்கள், ஆத்துமாக்களை சந்திக்க வேண்டும், கிறிஸ்துவுக்குள் வழி நடத்த வேண்டும் என்ற பாரத்தோடு ஜெபித்தாள். தேவன் அவளோடு பேசினார், கல்லூரி மாணவர்கள் மத்தியில் போய் ஊழியம் செய் என்றார்.

அவள் மீண்டும் குருவானவரிடம் சென்று கல்லூரி மாணவர்கள் மத்தியில் சென்று ஊழியம் செய்யும்படி சொன்னதாகக் கூறினாள்.

குருவானவரும் நீங்கள் போய் தேவன் சொன்னடிபயே கல்லூரி மாணவரிடம் சென்று ஊழியம் செய்யுங்கள் என்று சொல்லி ஜெபித்து அனுப்பிவைத்தார்.

சில நாட்கள் ராய் உபவாசம்பண்ணி ஜெபித்து விட்டு ஆத்தும பாரத்தோடு அங்கிருந்த ஒரு கல்லூரிக்குச் சென்றாள் அங்குள்ள பிரின்சிபல், மற்றும் சில பேராசிரியர்களிடம் தன்வாஞ்சையைத் தெரிவித்தாள். அதன்பின் அங்கிருந்த ஒரு Black Board ல் "சமாதானம் இல்லாதவர்கள் என்வீட்டிற்கு வாருங்கள்" என்று எழுதிவிட்டு, அதின் அடியில் தன்னுடைய வீட்டு விலாசத்தையும் எழுதி விட்டு தன்வீட்டிற்கு வந்து ஜெபித்துக் கொண்டே இருந்தாள். சில நாட்களுக்குப் பிறகு ஜென்னி என்ற சீனநாட்டைச் சேர்ந்த மாணவன் அவள் வீட்டிற்கு வந்தான். அவள் மிக அன்போடு வரவேற்று அவனை உட்கார வைத்து, அவனுக்கு தேனீருல், பலகாரங்களுக்கும் கொடுத்து அன்போடு உபசரித்து, ஜெபித்து இயேசுவின் அன்பைக் கூறினாள். ஒரு வேதபுத்தகத்தை கையில் கொடுத்து அனுப்பினாள். ஜென்னியும் தனக்கு சமயம் கிடைக்கும் போதெல்லாம் அவள் வீட்டிற்கு வர ஆரம்பித்தான். அவளும் அவனுக்கு தினமும் சொஞ்சம், கொஞ்சமாக சத்தியத்தைச் சொல்லி இரட்சிப்புக்குள் வழி நடத்தினாள் ஜென்னியும் தன்னுடன் பயின்ற மற்ற ஆசிய நாட்டு மாணவர்களை அழைத்துவருவான் சுவிசேஷத்தைச் சொல்லி இரட்சிப்புக்கு நேராக வழி நடத்தினாள்.

பத்து ஆண்டுகளுக்குப்பின் அவள் பலவீனப்பட்டு மரித்து, தேவனிடத்திற்குப் போய் சேர்ந்தாள். அவளுடைய அடக்க ஆராதனை அவளுடைய ஆலயத்தில் மிகுந்த மரியாதையுடன், சிறந்த முறையில் நடைபெற்றது. அந்த ஆராதனையில் மட்டும் 80க்கு மேற்பட்ட ஆசிய மாணவர்கள் தாங்கள் ராய் என்ற தாயின் ஊழியத்தின் பயனாக இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டதாகச் சாட்சிபகர்ந்தனர்.

தேவ பிள்ளையே தேவ பணிக்கு வயது வரம்பு தேவை இல்லை. அற்பணிப்பு, ஆத்தும பாரம் தான் தேவை. உன்னை அற்பணிப்பாயாக, ஆத்தும ஆதாயம் செய்வாயா?

<u>லில்லி</u>

ரோமாபுரியில் கொலைகாரன் ஒருவனை பகிரங்கமாக சுட்டுக் கொல்லுவதற்காக ஒரு வீதியில் ஒரு பெரிய கம்பத்தோடு கட்டி வைத்திருக்கிறார்கள். அவனுடைய பரிதாப மரணத்தைக் காண்பதற்காக எண்ணற்ற மக்கள் சூழ்ந்த நின்று கொண்டிருக்கிறார்கள் அவனை சுட்டுக் கொல்லும் நேரம் நெருங்கிவிட்டது. அவனை சுட்டுக் கொல்லும் தளபதியும் வந்து விட்டான். குறிப்பிட்ட நேரம் வரும்வரை

காத்திருக்கிறான். குற்ற வாளியின் உடலில் பயம், நடுக்கம், வியர்வை உடலிருந்து வியர்த்துக் கொட்டிக் கொண்டிருக்கிறது.

வேடிக்கைப் பார்க்க நின்று கொண்டிருந்தவர்களில் லில்லி என்ற சிறுப்பெண் கையில் ஒரு அழகிய ரோஜா பூவை எடுத்துக் கொண்டு குற்றவாளியை நோக்கி அருகில் ஓடிவந்தாள். எல்லோரும் ஆச்சரியத்தோடு என்ன நடக்குமோ என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவள் குற்றவாளியின் கையில் அந்த ரோஜாப் பூவை வைத்துவிட்டு "Jesus loves you. Jesus loves me, Jesus loves இயேசு உன்னை நேசிக்கிறார், இயேசு என்னை நேசிக்கிறார், இயேசு நம் எல்லோரையும் நேசிக்கிறார் என்று கனிவோடு அவனைப் பார்த்துச் சொல்லி விட்டு ஓடிவிட்டாள். இயேசு நேசிக்கிறார் என்ற வார்த்தை அவன் உள்ளத்தில் பேச ஆரம்பித்தது. உள்ளம் உடைந்தது மனந்திரும்பினான், பயம், கலக்கம். நடுக்கம் அவனை விட்டு நீங்கி விட்டது, உள்ளத்தில் ஒரு தெளிவு, சமாதானம் ஏற்பட்டது, இயேசு என் பாவங்களை மன்னித்து விட்டார். நிச்சயம் பரலோகம் போவேன் என்ற நிச்சயம் வந்தது. சுட்டுத்தள்ளப்பட்டான், மகிழ்ச்சியோடு மரித்தான், பரலோகம் சென்றான்.

தேவபிள்ளையே இந்த சிறுபெண் லிசிக்கு இருந்த தைரியம், ஆத்துமபாரம், சந்தர்பத்தை பயன்படுத்திக் கொள்ளும், எண்ணம் நமக்கு உண்டா? மரிக்கும் தருவாயில் இருக்கும் மக்களைச் சந்தித்து தேவனிடம் வழி நடத்தும் ஆத்தும பாரம் நமக்கு உண்டா?

வில்சியின் ஆத்தும பாரம்!

இந்தோனேஷியாவில் வில்சி என்ற பெண் ஒரு செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவள். இவளுடைய பெற்றோர்கள் இவளை மிக பக்தி முறையில் வளர்த்தார்கள். காலையில் 5 மணிக்கெல்லாம் தனி ஜெபம் செய்வாள். அதன் பின் வேதத்தை ஐந்து பாகமாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியிலும் ஒரு அதிகாரம் என்ற முறையில் கருத்தோடு ஆராய்ந்து படிப்பாள். அதன் பின் தாய் தந்தையுடன் சேர்ந்து எழுமணிக்கு முன்பு இரண்டு பாடல்கள் படித்து வேதத்தில் அன்றன்றுள்ள வேதப் பகுதியை படித்து தாய் அல்லது தந்தை ஜெபித்து குடும்ப ஜெபத்தை முடிப்பார்கள். அதன் பின்பு தான் இரவில் படித்த பாடங்களை மீண்டும் ஞாபகப்படுத்தி படித்து விட்டு, தான் தாய் தந்தைக்குச் செய்ய வேண்டிய வீட்டு வேலைகளைச் செய்து கொடுத்துவிட்டு பள்ளிக்குச் செல்வாள். ஆசிரியைகளிடமும் மிக அன்போடும் கீழ்படிதலோடும் நடந்து கொள்வாள். படிப்பிலும் சிறந்து விளங்கினாள்.

ஞாயிற்றுக் கிழமை, பரிசுத்த ஓய்வு நாள் வந்துவிட்டால் மிகவும் சந்தோஷப்படுவாள். மிக உற்சாகத்துடன் ஆலய ஆராதனையில் பங்கு பெறுவாள், ஓய்வு நாள் பாடசாலையில் பங்கு பெறுவாள். காலப்போக்கில் வயதாக வயதாக ஓய்வு நாள் பாடசாலையும், அதன்பின் வாலிப பெண்கள் கூட்டமும் நடந்த ஆரம்பித்தாள். நேரம் கிடைக்கும் போதெல்லாம் தேவனோடு நெருங்கிய உறவு கொள்ள ஆரம்பித்தாள், அதிகாலையில் தேவ சத்தம் கேட்க காத்திருப்பாள். தேவன் அவளோடு பேச ஆரம்பித்தார்.

ஒரு நாள் அவள் தேவ சமூகத்தில் காத்திருக்கும்போது சிறுவன் சாமுவேலோடு பேசிய தேவன் லிசியோடு பேசினார் லிசி ஊருக்கு வெளியே ஆற்று ஓரத்தில் ஒரு சிறு குடிசையில் வாழ்ந்து கொண்டிருக்கும் நோய்வாய்பட்ட கிங்ஸ்டன் என்ற பிச்சைக்காரனை போய் சந்தித்து என் அன்பை எடுத்துச் சொல்லி ஒரு வேத புத்தகத்தைக் கொடு என்று சொன்னார்.

செல்வந்தர் குடும்பத்தில் பிறந்திருந்த போதிலும் அவள் தன் அந்தஸ்து, கல்வியையும் பாராமல் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்படிந்து ஊருக்கு வெளியே ஆற்று ஓரத்தில் ஒரு குடிசையில் வாழ்ந்து கொண்டிருந்த அந்த மனிதனைத் தேடிச் சென்றாள். அவனைக் கண்டால், அருகில் சென்றாள், சகோதரனே இயேசு உன்னை நேசிக்கிறார் என்று

சொல்லிவிட்டு அவள் கொண்டு வந்திருந்த அந்த வேதப்புத்தகத்தை அவனிடம் நீட்டினாள். அவ்வளவுதான், அவன் ஒரு காலத்தில் நல்ல வசதியுடன் வாழ்ந்தவன். அவனுடைய துணிகரமான பாவச் செயல்களினால், செல்வத்தை இழந்து சுகத்தையும் இழந்து, தரித்திரப்பட்டு, பிச்சைக்கார கோலத்திற்கு வந்து விட்டான். எனவே இவளைப் பார்த்ததும், வேதப் புத்தகத்தைக் கண்டதும் அவனுக்கு ஆத்திரம், கோபம், வெளியே போ, என்னிடம் வராதே அந்த வேதம் புத்தகமும் எனக்குத் தேவை இல்லை என்று விரட்டியடித்தான்.

லிசிக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை மிக மன வேதனையுடன் வீட்டிற்கு திரும்பி வந்து விட்டாள். ஆனால் தேவன் மீண்டும் நீ அவனிடம் போய் வேதப் புத்தகத்தைக் கொடு என்றார். லிசி மீண்டும் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்படிந்து சென்றாள். அவனிடம் அந்த வேதப் புத்தகத்தை நீட்டிய போது நீயும் வேண்டாம், உன் வேதப்புத்தகமும் வேண்டாம் என்று திட்டி அனுப்பி விட்டான். மிக வேதனையோடும் ஏமாற்றத்தோடும் திரும்பி வந்து விட்டாள். ஆனால் தேவன் அவளை விடவில்லை. மீண்டும் நீபோய் இந்த வேதப்புத்தகத்தைக் கொடுத்து வா என்றார். கஷ்டமாக இருந்தபோதிலும், மீண்டும் அவனைத் தேடிச் சென்று அவன் திட்டிய போதிலும், அதைப் பொருட்படுத்தாமல் அவன் குடிசையில் வைத்து விட்டு திரும்பி வந்துவிட்டாள்.

இரண்டு நாட்களுக்குப் பின்பு அவன் வேதப் புத்தகத்தை எடுத்துப்படித்துப் பார்த்தான், அவன் கண்களில் பட்டது அவன் இவனைப் பெற்றாள், இவன் அவனைப் பெற்றான் என்று அவன் அப்படியே மூடிவைத்து விட்டான். மீண்டும் சில நாட்களுக்குப் பின்பு அவனைப் பார்க்கப் போனாள். இந்த வேதப்புத்தகத்தைப் படித்தாயா என்று கேட்டாள். அன்று அவன் அவளிடம் கோபப்படாமல், அதைப் படித்துப் பார்த்தேன் அவன் இவனைப் பெற்றாள், இவன் அவனைப் பெற்றான் என்று தான் வருகிறது. ஆகையால் அப்படியே மூடி வைத்துவிட்டேன் என்றான். ஐயா நீங்கள் ஒரு மீன் துண்டில் மெதுவாக முள்ளை எடுத்துவிட்டு மற்றப் பகுதிகளை சுவைத்துச் சாப்பிடுவது போல இந்த வேதப்புத்தகத்தில் உங்களுக்கும் புரியாத, கருகலான விளங்கிக் கொள்ள முடியாத சில பகுதிகளை ஒதுக்கி விட்டு மற்ற பகுதிகளைப் படியுங்கள். அதன்பின் கருகலான பகுதிகளை மெதுவாப் படியுங்கள் என்றாள். லிசி தன்கையில் கொண்டு வந்திருந்த சில பலகாரங்களை அவனிடம் கொடுத்து விட்டு,

இயேசு உங்களை நேசிக்கிறார் இன்னும் கொஞ்சம் தொடர்ந்து படியுங்களேன் என்று சொல்லி விட்டு திரும்பி வந்து விட்டாள்.

அவனும் கொஞ்சம், கொஞ்சமாகப் பொறுமையுடன் படிக்க ஆரம்பித்தான், யோவான் 3:16 அவனுடன் பேசியது தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் என்ற வசனம் அவன் உள்ளத்தில் பேசியது. தேவனுடைய அன்பை புரிந்து கொண்டான், தேவன் தன் இரட்சகராக ஏற்றுக் கொண்டான், வாழ்க்கை முற்றிலும் மாறியது. வேதகாம கல்லூரியில் சேர்ந்த படித்தான். விசியைப்போல தானும் ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சை உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. ஒரு சிறு சபையை ஆரம்பித்தான், அற்பமான ஆரம்பத்தை தேவன் கனப்படுத்தினார், ஆசீர்வதித்தார். பின் இச்சபை காலப் போக்கில் அமெரிக்காவில் இரண்டாவது பெரிய A.O.G. Church ஆக மாறியது. தேவ பிள்ளையே நீயும் அழிந்து போகும் ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய முன்வருவாயா?

"சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும்,
மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை.
அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது,
சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால்
எனக்கு ஐயோ!."

ஹில்டனின் ஆத்தும பாரம்!

ஜெர்மனி தேசத்தில் மியூனிக் நகரில் ஹில்டன், என்பவர் இரும்பு வியாபாரம் செய்து வாழ்ந்து வந்தார். நல்ல வருமானம் சகல வசதிகளுமடங்கிய வீட்டில் வாழ்ந்து வந்தான். இவருடைய மனைவி லிசி திருமணமான 5 ஆண்டுகளில் மரித்து விட்டாள், இவர்களுக்கு கிங்சிலி, டார்வின் என்று இரண்டு மகன்கள் உண்டு. தாய் இளமையிலேயே மரித்து விட்டதால் ஹில்டன் இரண்டு மகன்களையும் மிக செல்லமாக வளர்த்துவந்தார். இருவரையும் சிறந்த பள்ளியில் சேர்த்து படிக்க வைத்தார். கல்லூரியிலும் சேர்த்து படிக்க வைத்தார். M.A பட்டம் பெற்று அரசாங்கத்தில் சிறந்த பணியாற்றி வந்தான். இவனுடைய தம்பிக்கு தீய நண்பர்களின் பழக்கம் இருந்த படியினால் B.Sc-யில் தோல்வியடைந்து படிப்பை நிறுத்தி விட்டான்.

ஹில்டன் இளைய மகனின் போக்கு, பிடிக்காததால் மிகவும் மன வேதனைப்பட்டார். டார்வீனை அழைத்து பல முறை கண்டித்தார். தந்தையுடன் சேர்ந்து வியாபாரத்தையும் சரிவர கவனிக்க வில்லை. ஹில்டன் மகனுடைய எதிர்காலம் எப்படி அமையுமோ என்று கலங்கினார், வியாபாரத்திலும் நஷ்டம் எற்பட்டது. வியாதிப்படுக்கையில் விழுந்தார். மரித்துவிடுவோம் என்ற எண்ணம் வந்தபோது தன்னுடைய இரண்டு மகன்களையும் அழைத்து கிங்ஸ்லியின் கையில் டார்வினை பிடித்துக் கொடுத்து. அப்பா தேவனுடைய இராஜ்யத்திற்குப் போகிறேன். நீ தான் தம்பியை கடைசி வரை காப்பாற்ற வேண்டும் என்று சொல்லி விட்டு மரித்து விட்டார்.

கிங்ஸ்லி தம்பியைப் பார்த்து நான் அரசாங்கத்தில் வேலை செய்வதால் நான் எப்படியும் பிழைத்துக் கொள்ளுவேன். ஆகையால் அப்பா வைத்துச் சென்ற எல்லா சொத்துக்களையும் நீயே வைத்துக்கொள். எனக்கு ஒன்றும் வேண்டாம். நீ தீய நண்பர்களோடு சேராதே கெட்ட பழக்க வழக்கங்களை விட்டு விட்டு தேவனுக்காக வாழ வேண்டும். தினமும் வேதம்வாசி, தவறாது ஆலயத்துக்குப் போக வேண்டும். நல்ல நண்பர்களுடன் பழகு என்று பல ஆலோசனைகளைக் சொன்னான். நேரம் கிடைக்கும் போதெல்லாம் தம்பியை சந்தித்து ஆலோசனை கூறி வந்தான்.

ஆனால் டார்வின் அண்ணன் ஆலோசனை கூறும்போது கேட்பது போல் கேட்பான். ஆனால் பலவிதமான இரகசிய பாவங்களில் ஈடுபடத்துவங்கினான், குடி, சூதாட்டத்திலும் இரங்கினான். இதைக் கேள்விப்பட்ட கிங்ஸ்லி மிகவும் மனம் வருந்தினான். மீண்டும் பலமுறை சந்தித்து கண்டித்தான் வாழ பல வழிகளைக் கூறினான். ஆனால் டார்வின் கேட்பது போல் கேட்டு விட்டு மனம்போல வாழ்ந்து கொண்டிருந்தான்.

காலப் போக்கில் வியாபாரத்தில் பலத்த நஷ்டம் ஏற்பட்டது. பல இடங்களில் கடன்வாங்கினான். கடனை அடைக்க முடியாமல் அண்ணனுக்குத் தெரியாமல் ஊரைவிட்டு ஓடி விட்டான் கிங்ஸ்லி இதைக் கேள்விப்பட்டு மிகவும் மனம் வருந்தினான். தம்பியைப் பல இடங்களிலும் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. நாட்கள் உருண்டோடியது.

டார்வின் மிகவும் துன்மார்க்கமாக வாழ்ந்தான். பணமில்லாமல், சரியான உடை, உணவு இல்லாமல் தவித்தான். இறுதியில் பணத்திற்காக திருடத் துவங்கினான். ஒருநாள இரவு ஒரு செல்வந்தன் வீட்டி பணம் மட்டும் திருடவேண்டும் என்ற நோக்கத்தோடு சுவர் ஏறி விழுந்து பின் வாசல் வழியாக வீட்டுக்குள் நுழைந்தான். அந்த வீட்டில் இரு வயதான முதியவரும், மூதாட்டியும் மட்டும் தூங்கிக் கொண்டிருந்தனர். டார்வின் மெதுவாகச் சென்று படுக்கை அறையிலிருந்து பிரோவைத் திறந்தபோது ஏற்பட்ட சத்தத்தில் முதியவர் விழித்துக் கொண்டார், டார்வினை அடிக்க அவர் முயன்றபோது, தன் பாதுகாப்பிற்காக வைத்திருந்த கத்தியை எடுத்துத் தன்னைப்பாதுகாத்துக் கொள் அவரைத் தாக்கினான். அந்த கத்தி அவருடைய வயிற்றில் பாய்ந்ததால் ஐயோ என்று அலரிக்கொண்டே கீழே சாய்ந்தார், மரித்து விட்டார். இவர் போட்ட சத்தத்தில் வீட்டிலுள்ள காவலாளி விழித்துக் கொண்டேன். மேல்மாடிக்கு ஓடிவந்து பார்த்தபோது முதியவர் இரத்த வெள்ளத்தில் செத்துக்கிடந்தார். பக்கத்தில் அந்த மூதாட்டி கதரி அழுது கொண்டிருந்தார்கள். காவலாளியும் சத்தம் போடவே அக்கம் பக்கத்து வீட்டாரும் ஓடிவந்தார்கள், போலிசுக்கும் அறிவிக்கப்பட்டது. டார்வின் பின் சுவர் ஏறிக்குதித்து ஓடினான், அக்கம் பக்கமுள்ளவர்களும் போலிசார் அவனைத் துரத்த ஆரம்பித்தனர், அவன் வெகு விரைவாகத் தன் சகோதரன் கிங்ஸ்லியின் வீட்டிற்கு ஓடிச் சென்று நடு இரவில் கதவைத் தட்டினான்.

கிங்ஸ்லி கதவைத் திறந்தபோது டார்வின் இரத்தக்கரை படிந்த உடையுடன் அவனைத்தள்ளிக் கொண்டு உள்ளே வந்து கதவைப்பூட்டினான். கிங்ஸ்லி தம்பி என்ன நடந்தது, உன் உடையெல்லாம் இரத்தமாக இருக்கிறது என்று கேட்டார். டார்வின் நடந்துதைச் சொல்லி என்னை காப்பாற்று அண்ணா என்று அவன் கைகளைப்பிடித்துக் கொண்டு கெஞ்சினான், கதறினான். கிங்ஸ்லிக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. தந்தை சாகும் தருவாயில் தன்கையில் தம்பியை காப்பாற்று என்று சொன்ன காட்சி அவன் கண்ணுக்கு முன் வந்து நின்றது. உடனே தம்பியைப் பார்த்து தம்பி, தம்பி உன் உடைகளைக்கழற்றி என்னிடத்தில் தந்து விட்டு என் உடைய நீ மாற்றிக் கொள் என்றான். டார்வின் அவசர, அவசரமாகக் கழற்றி அண்ணன் கையில் கொடுத்துவிட்டு அவன் உடையை வாங்கிப்

போட்டுக் கொண்டான். அதற்குள் போலிசார் வந்து கதவைத் தட்டினார்கள், கிங்ஸ்லி கதவைத்திறந்தான். அவன் இரத்தக் கரைப்படிந்த உடையுடன் இருப்பதைக் கண்டு கைது செய்தனர். அண்ணன் கண்ணீரோடு தம்பியைப் பார்த்தான். டார்வின் கண்களிலிருந்து கண்ணீர் ததும்பியது கிங்ஸ்லியை இழுத்துச் சென்று சிறையில் அடைத்தனர்.

கோர்ட்டில் விசாரனை நடைபெற்றது. விசாரனை முடிந்து அவன் செய்த கொலைக்குற்றத்திற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. கிங்ஸ்லியிடம் உன் கடைசி விருப்பம் என்ன என்று கேட்கப்பட்டது. என் கடைசி ஆசை என் தம்பி டார்வினைப் பார்த்து பேச வேண்டும் என்று கூறினான்.

இருவரையும் சந்திக்க சிறை அதிகாரிகள் ஏற்பாடு செய்தனர். கிங்ஸ்லி ஆசையோடு தம்பியைக் காண காத்திருந்தான். டார்வின் வந்ததும் ஓடிச் சென்று கட்டிப்பிடித்து அழுதான். டார்வினும் கதறி அழுதான். தம்பி நீ இனியாவது திருந்தி வாழ்வாயா? நான் மரிக்கப்போகிறதைப் பற்றி கவலைப்படவில்லை. நான் இயேசுவின் பாதத்தண்டை சேர்வேன் அங்கு அவருடன் எப்போதும் மகிழ்சியாய் இருப்பேன் நம் அப்பாவும் அங்குதான் இருக்கிறார்கள், அவர்களையும் கான்பேன். நீயும் அங்கு வர வேண்டும் என்பதே என் கடைசி விருப்பம், நீ அங்கு வரவேண்டுமானால் நீ இளமையில் இருந்து செய்த அனைத்துப் பாவங்களையும், இயேசுவிடம் அறிக்கச் செய்து இரக்கத்துக்காகக் கெஞ்சு அவர் உன்னை நிச்சயம் மன்னிப்பார். இனி எந்த பாவத்தையும் செய்யாது, பரிசுத்தமாக வாழ். நாம் பரலோகத்தில் சந்திப்போம் என்று சொல்லி முடித்தவுடன் கிங்ஸ்லியை அழைத்துச் சென்றனர் டார்வின் அழுதுகொண்டே வீட்டிற்குச் சென்று பழைய வாழ்க்கையை விட்டு விட்டு திருந்தியவனாக தேவன் விரும்புகின்ற வாழ்கை வாழ்ந்தான்.

தேவபிள்ளையே உனக்காக, நீ செய்த நாம் செய்த பாவத்தை குற்றமற்ற இயேசு இரட்சகர் தன் மீது ஏற்றுக்கொண்டு நமக்காக அவர் சிலுவையில் அடிக்கப்பட்டார். நீயும் டார்வினைப்போல் உன் பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிடு, பரலோகத்திற்குப் பங்குள்ளவனாய் மாறு இயேசு இரட்சகருக்கு பிரியமாய் வாழ்ந்து பரலோகத்திற்குப் பாத்திரவனாக மாறுவாயாக.

உங்கள் கவனத்திற்கு!

இப்புத்தகத்திலிருந்து வரும்
வருமானத்தின் ஒரு பகுதி
பாளையங்கோட்டை
மருத்துவமனைகளில் கேட்பாரின்றி
அனாதை போல், உதவியை நாடி
நிற்கும் ஏழை நோயாளிகளுக்கும்
மிஷனெரி ஊழியங்களுக்கும்
பயன்படுத்தப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி

S. Selwyn Siromani M.A.,M.Ed.,F.M.,

14, 3rd Cross Street, Maharajanagar

Tirunelveli - 627 011, Tamilnadu, South India,

Ph: 0462 - 2581295

Cell : 9443808420

எமது இதர வெளியீடுகள்

1. இன்றைய உலகில் இதுவும்பாவமா?
2. உள்ளத்திலிருந்து பிறப்பது ஏன்? ஏன்? ஏன்?
3. தேவனோடு பேசும் வழி
4. செய்வினை, பில்லிசூனியத்திலிருந்து விடுதலை
5. வியாதியிலிருந்து விடுதலை
6. கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் (குடும்பங்கள்)
7. வேஷம் ஒருநாள் கலையாதோ

ஒலி, ஒளி நாடாக்காள்

1. குடும்பங்கள்
2. இரண்டாம் வருகை
3. ஆசீர்வாதத்தின் வழிகள்
4. பரலோகத்தின் வழி
5. உன்னை மறப்பதில்லை
6. மறுபிறப்பு
7. வாலிபத்தில் உன் சிருஷ்டிகரை நினை (தாவீது)
8. சிநேகம் - பாடல்கள்

Tirunelveli Diocesan Offset Press, Palayamkottai, Ph. : 2573182